# வலம்புரி

VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 21 செவ்வாய்க்கிழமை (05.03.2002) தொலைபேசி 3378 ஒலி 76





பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்


### இனப்பிரச்சினையை தீர்ப்பதன் மூலம்

# பிளவுபட்ட நாட்டை ஒன்றுபடுத்த

# சகல கட்சிகளும் முன்வர வேண்டும்!

## பாராளுமன்றில் பிரதமர் ரணில் அறைகூவல்



(கொழும்பு)

கடந்த பல ஆண்டு காலமாகப் பிளவுபட்டிருந்த நாட்டை ஐக்கியப்படுத்துவதற்கு அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து ஆரம்பிக்கப்பட்டுள்ள சமாதான முயற்சிகளுக்கு சகல கட்சிகளையும் உதவுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் அறைகூவல் விடுத்தார்.

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் இடையே கடந்த மாதம் 22ந் திகதி ஏற்பட்ட நிரந்தர யுத்த நிறுத்தத்திற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக நேற்றுப் பாராளுமன்றத்தில் இடம் பெற்ற விவாதத்தின் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மேற்கண்டவாறு அறைகூவல் விடுத்தார்.

`பிரதமர் பாராளுமன்றத்தில் தொடர்ந்து பேசுகையில்,

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை ஒரு யுத்த நிறுத்த உடன் படிக்கையாகும். இந்த உடன்படிக்கை இனப்பிரச்சினைக்கு இறுதி நடவடிக்கை அல்ல.

இந்த உடன்படிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளின் தேவைகளை நிவர்த்தி செய்வது மாத்திரம் அன்றி தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பாதையில் முன்னேறுவதற்கு ஒரு வாகனமாக உதவுகிறது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்துடன் தொடர்பு கொண்டுள்ள மனிதாபிமான பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு அன்றாட வாழ்வினை வழமைக்கு கொண்டுவருவதற்கு அரசுக்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கும்


(10ம் பக்கம் பார்க்க)


## இலங்கைக் கடற்படைக்கு ஆட்சேர்ப்பதில் தீவிரம்!

### யுத்த ஆயத்தம் என மக்கள் விசனம்

(கொழும்பு)

இலங்கை கடற்படையினர் தமது படையணியின் பலத்தை பெருக்கிக் கொள்ளும் வகையில் தீவிர ஆட்சேர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கடற்படையின் நிரந்தரப் படைப் பிரிவிற்கும் தொண்டர் பிரிவிற்கும் ஆட்சேர்க்கும் வகையில் நேற்று ஆட்சேர்ப்பு நேர் முகப் பரீட்சை ஆரம்பமாகியுள்ளது. இந் நடவடிக்கை எதிர் வரும் 19ந் திகதி வரை தொடர்ந்து இடம்பெறுமென்று கடற்படை அறிவித்துள்ளது.

பதுளை குருநாகல் எம்பிலிப்பிட்டிய மகியங்கனை கண்டி மற்றும் றம்பொடை ஆகிய பிரதேச செயலர் பிரிவு உட்பட மொத்தம் 17 பிரதேச செயலர் பிரவுகளில் தற்பொழுது ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

இதேவேளை நாட்டில் சமாதான சூழல் ஏற்பட்டு நிரந்தர போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில் கடற்படையினர் ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை மக்களை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்நிலை ஒருபுறம் சமாதானமும் மறுபுறம் போர் முஸ்தீபும் என்ற நிலையிலேயே வெளிப்படுத்தி நிற்பதாக விசனம் தெரிவிக்கப்பட்டது. (இ)

## புலிகளின் அலுவலகம் திருநெல்வேலியில் அமையும்

### கொழும்பு நாளிதழ் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் மாவட்டத்தில் தமது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக கொழும்பில் இருந்து வெளியாகும் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்று அவ் உடன்படிக்கையில் குறிப்பிடப்


(10ம் பக்கம் பார்க்க)


## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வுஉடன்படிக்கையைக் கண்காணிப்பதற்கு கொழும்பு வந்துள்ள நோர்வேயின் கண்காணிப்புக் குழுத் தலைவர்,


(10ம் பக்கம் பார்க்க)


## நாட்டில் மூன்றில் ஒரு பகுதி பிரபாகரனிடம் ஒப்படைப்பு

### ஜே.வி.பி எம்.பி ஆவேசம்

(கொழும்பு)

அரசு புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் பிரபாகரனுக்கு நாட்டின் மூன்றில் ஒரு பகுதி வழங்கப்பட்டு விட்டது. ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நேற்று பாராளுமன்றில் இடம் பெற்ற புரிந்துணர்வு தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்:-

நிரந்தர யுத்த நிறுத்தத்தின் மூலம் தமிழ்க் கட்சிகள் விடுதலைப் புலிகளிடம் கை நீட்டி நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் புலிகளின் சகல நடவடிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய ஒப்பந்தத்தின் மூலம் நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்கு பதிலக எதிர்காலத்தில் தனி நாடு கோரி பல போராட்டங்கள் தோற்றம் பெறுவதற்கு வழிவகுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழ்க் கட்சிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவது தவறு

### பாராளுமன்ற விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வரவேற்றுள்ளார். ஆனால் போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த விதம் தவறானதாகும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து நேற்று பாராளுமன்றத்தில் விவாதம் இடம் பெற்றது.

இவ் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ள

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:-

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிர ாகரன் புரந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னரே ஜனாதிபதியிடம் ஒப்பந்த நகல் கையளிக்கப்பட்டது.

அத்துடன் ஒப்பந்தத்தில் பல தீய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ்க் கட்சிகளிடம் இருந்து ஆயுதங்களை களைவது தவறானதொரு நடவடிக்கை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார். (இ)

## கம்பவாரிதி யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ. ஜெயராஜ் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளார்.

1995ம் ஆண்டில் ஏற்பட்ட இடம் பெயர்வை அடுத்து கொழும்பில் தங்கியிருந்த கம்பவாரிதி கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் வந்து கம்பன் கோட்டத்தில் தங்கியுள்ளார். (ந)

## இரு புதல்வர்களுடன் அனுருத்த நீதிமன்றில் நேற்று ஆஜர்!

(கண்டி)

கடந்த பொதுத் தேர்தலின் போது கண்டி மடவளைப் பகுதியில் இடம்பெற்ற 10 முஸ்லிம் இளைஞர்களின் படுகொலை சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, அவரது மகன்கள் சானுக ரத்வத்த, ரொகான் ரத்வத்த உட்பட 35 பேர் நேற்றுக் கண்டி தெல்தெனிய நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்னர்.

கண்டி தெல்தெனிய நீதி மன்றம் இவர்கள் ஆஜர் செய்யப்


(10ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சிவயோக சுவாமிகள் அருளிய நற்சிந்தனை ஐந்தாம் பதிப்பு இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம், திருக்குறள் திருவாசகம், திருப்புகழ், ஔவையார், பட்டினத்தார், தாயுமானவர், வள்ளலார், இன்னும் பலபெரியோர்கள் அருளிய நல்லறிவு நூல்கள் இருக்கின்றன . தொடர்பு - 135 சிவன்கோவில் முன்பாக நல்லூர்யாழ்ப்பாணம். நேரம் மாலை 2.00 - 7.00வரை.

(4774)

## இறுதிப் பரீட்சை மே மாதம்

யாழ்ப்பாணத்திலுள்ள ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளின் ஆசிரிய மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி முதல் 10ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

பரீட்சை முடிந்ததும் 15ம் திகதி முதல்ஆசிரியமாணவர்கள் தத்தம் பாடசாலையில் கடமையை ஏற்கும்பொருட்டு உரிய படிவங்களை மாகாண கல்விப்பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ5-59)

# உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைப்பை பொ. ஐக்கிய முன்னணி எதிர்க்கும்

## அமைப்பாளர் மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெற இருக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் சில உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை ஒத்திவைப்பதென அரசாங்கம் எடுத்த முடிவை பொதுஜன ஐக்கியமுன்னணி அமைப்பாளரும பாராளுமன்றஉறுப்பினருமான மங்கள சமரவீர வன்மையாகக் கண்டித்துள்ளார்.

அரசாங்கம் எடுத்த இந்த முடிவை குறித்து ஆராயும் பொருட்டு நேற்று பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற குழுக் கூட்டம் இடம் பெற்றது.

இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக மங்கள சமரவீர அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருந்தார் அந்த அறிக்கையிலேயே இவ்வாறு கண்டனம்தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் சிலவற்றுக்கான தேர்தலை ஒத்திவைப்பதன் மூலம் அந்த மன்றங்களின் மீது சட்ட விரோதமாக அடக்குமுறைகளை மேற் கொள்ள அரசு சூழ்ச்சி செய்துள்ளது.

அந்தபிரதேசங்களில் தபால் மூல வாக்களிப்பினை நடத்த முடியாவிடில் அதனை ஒத்திவைத்து தேர்தல்நடைபெறும் தினத்தில் நடத்துமாறு அல்லது சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கு மான தேர்தலை ஒரே தினத்தில் நடத்துமாறு அரசை வற்புறுத்துவதெனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5)

## நூறுநாள்வேலை திட்டத்தின் கீழ் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்சத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ்சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட பலபகுதிகள் சிரமதானப்பணிமூலம் துப்பரவுசெய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிபிரதேச சபைக்குட்பட்ட பாடசாலைகள் ஆலயங்கள் முதியோர் இல்லம், நூலகங்கள், சந்தைகள், பொதுஇடங்கள், கிணறுகள் போன்றவை இச் சிரமதானப்பணி மூலம் துப்பரவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில் இங்கு இடம்பெற்ற போர் அனர்த்தங்களினால் இப் பகுதிகள் மிகமோசமாகப் பாதிப்படைந்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ10

## கணிப்பீடு தொடர்பான ஆசிரியர் செயலமர்வுகள்

(யாழ்ப்பாணம்)

தரம் 10, 11 வகுப்புக்களுக்கான பாடசாலை மட்டக் கணிப்பீடுதொடர்பானஆசிரியர் செயலமர்வுகள்இம்மாதம் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளில் கணிதம் தமிழ் சமூகக் கல்வி, ஆங்கிலம் ,சமயம் ஆகிய பாடங்களுக்கு இடம் பெறவுள்ளன.

எதிர்வரும் 8ம் திகதி வெள்ளிக் கிழமை யாழ்ப்பாணம் நல்லூர் கோப்பாய்க் கோட்டங்களுக்கான செயலமர்வும்.

9ம் திகதி யாழ்ப்பாணம் நல்லூர் கோட்டங்களுக்கான செயலமர்வும்.

11ம்திகதி திங்கள் கிழமை கோப்பாய் கோட்டங்களுக்கான செயலமர்வும் காலை 9.30 மணி முதல் மாலை 4. 30மணிவரை இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளுக்கான செயலமர்வுகள் வேம்படிமகளிர்உயர்தரப் பாடசாலையிலும் நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளுக்கான செயலமர்வுகள் யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் கோப்பாய்க் கோட்டக் பாடசாலைகளுக்கான செயலமர்வுகள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது

இதேவேளைகத்தோலிக்கம் கிறிஸ்தவ சமயம் பாடங்களுக்கான செயலமர்வு யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் மாத்திரம் இடம் பெறுவதுடன் அழகியல் தொழில் நுட்பப் பாடம் என்பவற்றிக்கான செயலமர்வுகள குறித்து பின்னர் அறிவிக்கப்படும். (உ-19)

## சமுர்த்தி ஒன்றியம் தெரிவு

(காரைநகர்)

யாழ்மாவட்ட பிரதேச செயலகங்களின் சமுர்த்திஅபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான மன்றங்களின் ஒன்றிய அங்குரார்ப்பணக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் அண்மையில் யாழ் டி.எம்.ஐ கல்விநிலையத்தில் நடைபெற்றது.

இவ்ஒன்றியத்தின் நிர்வாகத்தலைவராக சி.சிறிதரன் (யாழ்பிரதேச செயலகம்) உபதலைவராக தி.பிரபாகரன்(தெல்லிப்பழை பிரதேச செயலகம்) செயலாளராக சி.கபிலன் (தென் மராட்சி பிரதேசசெயலகம்) உபசெயலாளராக செ.அரியநாயகம் (மருதங்கேணி பிரதேசசெயலகம்) பொருளாளராக வி.முரளிதாஸ் (வேலணைப் பிரதேசசெயலகம்) ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக 14பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

(உ-246)

## கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலம்

# வருடாந்தத் திருவிழா - 2002




**அன்புடையீர்,**

மேற்படி ஆலய திருவிழா 08 . 03 . 2002 வெள்ளி முதல் 10 . 03 . 2002 ஞாயிறு வரை நடைபெறும் என்பதை பக்தர்களுக்கு அறிவிப்பதில் பெரும் மகிழ்வடைகிறோம்.

இவ்விழாவில் கலந்துகொள்ள விரும்பும் பக்தர்களின் நலன்கருதி நெடுந்தீவிலிருந்து மட்டும் கச்சதீவிற்கு படகுச்சேவை நடைபெறும்.

நெடுந்தீவிலிருந்து 08 . 03 . 2002 வெள்ளி காலை 8.30 மணி தொடக்கம் படகுச்சேவைகள் நடைபெறும்.

09 . 03 . 2002 சனிக்கிழமை காலை 6.30 மணியிலிருந்தும், 10 . 03 . 2002 ஞாயிறு காலை 5.00 மணிக்கு இறுதிப்படகுச் சேவையும் நடைபெறும்.

யாழ்ப்பாணத்திலிருந்து வரும் பக்தர்கள் காலை 10.00 மணிக்கும், மாலை 3.00 மணிக்கும் குறிகட்டுவானிலிருந்து புறப்படும் வழமையான படகுச்சேவை மூலம் நெடுந்தீவிற்கு வருகை தரலாம்.

10 . 03 . 2002 ஞாயிறு முதலாவது திருநாள் திருப்பலி காலை 7.00 மணிக்கும் இரண்டாவது திருநாள் திருப்பலி காலை 10.00 மணிக்கும் அதைத் தொடர்ந்து புனிதரின் திருச்சொரூப பவனியும் திருச்சொரூப ஆசிர்வாதமும் வழங்கப்படும்.

முக்கிய குறிப்பு:

பக்தர்கள் தமக்குத்தேவையான உணவு, குடிநீர், தங்குமிடம் அமைப்பதற்கு தேவையான உபகரணங்களைத் தாமே கொண்டுவர வேண்டும்.

இது ஓர் பக்தியான யாத்திரை, ஆகவே சுற்றுலா நோக்குடனோ, உல்லாச பயணமேற்கொண்டோ, கேளிக்கை நோக்குடனோ கலந்துகொள்ள வேண்டாம்.

அவ்வாறு சுற்றுலா, உல்லாசப்பயணம் மேற்கொள்ளவிரும்புபவர்கள் திருவிழா முடிவுற்றவுடன் அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

பக்தர் மதுபானங்களோ, வானொலிப்பெட்டிகளோ, இசைக்கருவிகளோ கொண்டுவருதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவு துறைமுகத்தில் பக்தர்களின் அனைத்துப் பொதிகளும் சோதனை செய்தபினனே படகில் செல்ல அனுயதிக்கப்படுவார்கள்.

கச்சதீவில் அமைந்துள்ள புனிதரின் ஆலயத்தையும், அதன் சுற்றுப்புறங்களையும் புனிதமாகவும், சுகாதாரமாகவும் பேணக் கடமைப்பட்டுள்ளார்கள.

நெடுந்தீவு, கச்சதீவு ஒருவழிப் பாதைக் கட்டணம் ரூபா 125/- மட்டும்.

இத்திருவிழா சிறப்பாக நடைபெற வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவிகள புரிந்த யாழ் மறைமாவட்ட ஆயர் ரி. சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்கும் மேதகு குருமுதல்வர் அருட்திரு எஸ். செல்வராசா அடிகளார்க்கும், வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு மீளகுடியமர்வு அமைச்சர் டாக்டர் மாண்புமிகு ஜெயலத் ஜெயவர்த்தனா அவர்களுக்கும், யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். சண்முகநாதன் அவர்களுக்கும், மேலதிக அரசாங்க அதிபர் ரி. வைத்திலிங்கம் அவர்களுக்கும், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் அவர்களுக்கும், காரைநகர் கடற்படை அதிகாரி அவர்களுக்கும், நெடுந்தீவு ப . நோ . கூ . சங்கம், பிரதேசபை மற்றும் படகு உரிமையாளர்களுக்கும், ஆலய திருப்பணிக்கு அன்புக்கரம் நீட்டிய அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் புனிதரின் ஆசியை வேண்டி நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

**அருட்திரு எம் . எல்.மொன்பேட்**
பங்குத்தந்தை
நெடுந்தீவு, கச்சதீவு.

**புலவர்'ஏ.டபிள்யூஅரியநாயகம்**
ஆலயமூப்பர் (ஜே.பி.யூ.எம்)
தலைவர்
பிரதேசசபை
நெடுந்தீவு.

( கி-3651)

## விபத்தில்மாணவன் படுகாயம்

(மந்திகை)

பருத்தித்துறை பிரதான வீதியில் நேற்றுமாலை 4மணியளவில் இடம்பெற்ற லொறி சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவன் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையின் அவசர சிசிச்சைப்பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

ரியூசனுக்கு சென்று விட்டு வீடுதிரும்பிக் கொண்டிருந்த தரம் 5மாணவனான ரவீந்திரன் ஜெயகிருஷ்ணன்(வயது-10) என்றமாணவனே லொறியின் பின் சில்லுவயிற்றில்ஏறியதால் மிகவும் ஆபத்தான நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேற்படி சம்பவத்துடன் தொடர்புபட்டதாகக் கருதப்படும் லொறி சாரதி பருத்தித்துறை பொலிசில் சரண்அடைந்துள்ளார்

(ந:5.245)

## யாழ் பல்கலையில் ....

இராமநாதன் நுண்கலைப் பீடத்தைச்சேர்ந்த 56பேரும் கலைப்பீடத்தைச்சேர்ந்த258 பேரும் பட்டம் பெறுவதுடன் முதுகல்வியியல் மாணிப்பட்டத்தை 47பேர் பெறவுள்ளனர். (உ-5,77)


பனை அபிவிருத்திச் சபை - திக்கம் வடிசாலை

**கூறுவிலை திறந்து பரிசீலித்தல்**

யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் பிரசுரமாகிய பாதுகாப்பு அறை கூறுவிலை கோரலும், பாரிய மரக் கொள்கலன்களை அதற்குரிய அடித்தளங்களில் தூக்கி வைத்தல் கூறுவிலை கோரலும், நாளை (06-03-2002)புதன்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு சபையின் தலைமையகம் 53, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் திறந்து பரிசீலிக்கப்படும். கூறுவிலை சமர்ப்பித்தோர் சமுகமளிக்கவும்.

பொ. சிவபாதம்
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

தலைமையகம்,
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 3645)

# ரத்வத்தையின் கைதும் அதன் பின்னணியும்

**பெப்ரவரி 24ஆம் திகதி 'சண்டே லீடரில்' வெளியான கட்டுரையின் தமிழ் ஆக்கம்.**

அனுருத்த ரத்வத்தையின் முகத்தில் எந்நேரமும் ஓர் அசட்டுச்சிரிப்பு இருந்தது. கடந்த பொதுத்தேர்தலில் தனக்கு எதிராக வேலை செய்த 10 முஸ்லிம் இளைஞர்கள் கொல்லப்பட்டனர் என்பதைக் கேள்விப்பட்ட நாள் தொடக்கம் அவர் இறுதியாகக் கைதுசெய்யப்படும்வரை அந்த அசட்டுச்சிரிப்பு இருந்தது.

ஜெனரல் ரத்வத்தை கொலைக்கான திட்டத்தினை வகுத்தார் என்றகுற்றம் சாட்டப்பட்டவராக இருந்தாலும் அவர் இப்போது தேசிய மருத்துவமனையிலுள்ள 9 ஆம் நம்பர் மேர்ச்சன்ட் வாட்டில் சிகிச்சைபெற்றுவரும் ஒரு பிரத்தியேகமான மனிதர்.

கொலைச் சந்தேகத்தில் உத்தியோகபூர்வமாக கைதுசெய்யப்பட்ட எத்தனை கைதிகள் தமது மனைவியோடு பணம் செலுத்தும் ஒரு வார்ட்டில் எல்லா வசதிகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்!

### நோய்பற்றிய அறிவித்தல் இல்லை

தேசிய மருத்துவமனை நெறியாளர் ஹெக்டர் வீரசிங்கியோ அல்லது பிரபல டாக்டர்கள் எவராவது ரத்வத்தைக்கு என்னவருத்தம் என்பதை நாட்டிற்கு அறிவிக்க முடியவில்லை. அதனால் வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவ மனையிலும் அனுமதிக்க முடியவில்லை.

பெப்ரவரி 17 ஆம் திகதி அவரின் கைதுகுறித்து அறிவிக்கப்பட்டதுடன் ரத்வத்தையின் பிரகாசமான எதிர்காலத்தில் கரியரேகை படர்ந்தது. அன்று சட்டமா அதிபர் கே. சி. கமலசபேசன் புலனாய்வுத்துறையினருடன் நடத்திய கூட்டத்தில் ரத்வத்தையைக் கைதுசெய்வதற்குப் போதுமான ஆதரங்கள் இருக்கின்றனஎன்று தெரிவித்தார்.

அக்கூட்டத்தில் மேலதிக சட்டமா அதிபர் சி. ஆர். டி. சில்வா ஜனாதிபதியின் சட்டத்தரணி ரான்ஸி அரசகுலரத்னா, அரச சட்டத்தரணி அசலா வெங்காபுள்ளே ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

### புலனாய்வுத்துறை

புலனாய்வுத்துறையின் சார்பில் சமுகமளித்திருந்த புலனாய்வுத்துறை நெறியாளர் லயனல் குலத்திலக்கா, பதில் நெறியாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர மென்டிஸ் ஆகியோர் தாம் ரத்வத்தையைக் கைது செய்யலாமா என்று சட்டமா அதிபரை அப்போது கேட்டனர். அதற்கு அவர், அவரைக்கைது செய்வதற்குரிய போதிய ஆதாரங்கள் இருக்கின்றன. ஆனால் கைதுசெய்யும் முடிவினை புலனாய்வுத்துறையினரே எடுக்கவேண்டும் என்றார்.

எனவே, புலனாய்வுத்துறையினர் பிடிவிறாந்து பிறப்பித்து ரத்வத்தையைக் கைதுசெய்ய முடிவெடுத்தனர். திரைவிலக்கப்படவுள்ள இந்த நாடகம்பற்றி எப்படியோ மணந்துபிடித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சட்டமா அதிபருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு ரத்வத்தையை கைதுசெய்து தடுத்து வைப்பதற்கான முடிவை எடுப்பதற்குப் போதுமானஆதாரங்கள் இருக்கின்றனவா என்று கேட்டார்.

அதற்குச் சட்டமாஅதிபர் கொலைகளுடன் ரத்வத்தை சம்பந்தப்பட்டார் என்று கைதுசெய்வதற்குப் போதுமான ஆதாரங்கள் இருப்பதாக மீண்டும் விளக்கமளித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்களைக் கொலை செய்வதற்கும், தாக்குவதற்கும் ரத்வத்தை சதி செய்தார் என்ற குற்றங்கள் சட்டமா அதிபரால் கண்டறியப்பட்டன. அத்துடன் டிசம்பர் 5 ஆம்திகதி இராணுவத்தைச் சேர்ந்தவர்களை வைத்து மடவளவில் கொலை செய்வதற்கு உடந்தையாக இருந்தார் என்று இன்னொரு குற்றமும் இருந்தது.

### மாலிக்கின் சாட்சியம்

அந்தப் பயங்கரத் தாக்குதலில் படுகாயமடைந்த மாலிக் என்ற முஸ்லிம் இளைஞர் சம்பவம் நிகழ்ந்த இடத்தில் ரத்வத்தையின் புதல்வர்களாகிய லோகான், சானுக் ஆகிய இருவரும் நின்றார்கள் என்று அளித்த சாட்சியத்தின் பேரில் சட்டமா அதிபர் திணைக்களம் ரத்வத்தையின் குற்றங்கள் குறித்து தீர்மானம் எடுத்திருந்தது.

மாலிக் பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தின் போது, தான் இறந்ததுபோல் கிடந்ததாகவும், லோகான் இராணுவ வீரர் ஒருவரிடம் காயப்பட்ட ஒருவரின் வாய்க்குள் துப்பாக்கியால் சுடுமாறு கட்டளையிட்டதாகவும் கூறியிருந்தார்.

மருத்துவ பரிசோதனை அறிக்கையும் காயப்பட்டவர்களில் ஒருவர் நிச்சயமாக வாய்க்குள் சுடப்பட்டிருக்கிறார் என்று மாலிக்அளித்துள்ள சாட்சியத்தோடு ஒத்திருக்கின்றது. அனுருத்த ரத்வத்தை, அவரதுஇரு புதல்வர்கள் உட்பட 6 பேர் காயப்பட்டவர்களால் அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்.

பெப்ரவரி 18 ஆம் திகதி திங்கட்கிழமை இடம் பெற்ற அடையாள அணி வகுப்பின் போது மாலிக் இருவரை அடையாளம் காட்டினார். அவருடன் காயமடைந்த இருவர் மற்றவர்களை அடையாளம் காட்டினார்கள்.

இந்த வழக்கில் மாலிக் பிரதான சாட்சியாவர். அவர் மேற்படி படுகொலைகளுடன் தொடர்புடைய இராணுவத்தினரை அடையாளம்காட்டியதால் லோகான், சானுக்கா ஆகியோருக்கு எதிராக அவர் அளித்த வாக்கு மூலம் மிகவும் நம்பத்தகுந்ததாக இருக்கின்றது என்றுவழக்குத்தொடுத்தவர் தரப்பிலான வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே சட்டத்தின் கைகளுக்கு எட்டாது தலைமறைவாகியிருந்த லோகானையும் சானுக்காவையும் புலனாய்வுத் துறையினர்தேடினர். அத்தேடுதல் இழுபட்ட நிலையில் புரியாத புதிராக மந்தநிலையில் இருந்தது. இதனால்அவர்கள் துப்புத்துலக்குவோர்கண்களுக்கு அகப்படாது வெற்றிகரமாக மறைந்திருந்தார்கள்.

### ரத்வத்தையின் இல்லத்தில்

இந்நிலையில், பெப்ரவரி 19 ஆம் திகதி மாலை 6.45 மணியளவில் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த 8 பேர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிராமென்டிஸின் தலைமையில் ராஜகிரியாவிலுள்ள ரத்வத்தையின் இல்லத்திற்குச் சென்றார்கள்.

அவர்கள் அங்கு சென்றதும் மங்கள சமரவீர, சிறிபால டிசில்வா, அனுராபிரியதர்ஷன யாப்பா, கோட்டே மாநகர முதல்வர் சந்திரா சில்வா, சிறிபதி சூரியாராச்சி சந்தேகப் பேர்வழிகளாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 5 இராணுவத்தினரின் சட்டத்தரணி அஷ்லி ஹெரத் சட்டத்தரணியான தனது மனைவியுடன் அங்கு வந்தார். அவர்கள் வீட்டு வாசலால் உள்ளே போனால் புலனாய்வுத் துறையினரின் கண்களில் அகப்பட வேண்டிவரும் என்று பயந்து ஜன்னல் ஊடாக ஏறி உள்ளே போனார்கள்.

மங்கள சமரவீர ரத்வத்தையைக் கைது செய்யும் செயல் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினதும், விடுதலைப் புலிகளினதும் சதி என்றும், அதைத் தடுக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பலத்த சத்தமிட்டு அங்கிருக்கும் ஒவ்வொருவரையும் தூண்டிக் கொண்டிருந்தார்.

மடவளவில் 10 முஸ்லிம் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டதில் ரத்வத்தைக்கு சம்பந்தம் உண்டு என்பதற்கு போதுமான ஆதாரங்கள் பொலிஸாருக்குக் கிடைத்திருக்கின்றன என்பது சமரவீரவின் கவனத்திலிருந்து நழுவி விட்டது போலும்!

இத்தனைக்கும் கொலையுண்ட 10 முஸ்லிம் இளைஞர்களும் ரமுகர்களோ, அன்றி ஊழல் பேர்வழிகளோ அல்லர்!

அப்போது மங்கள சமரவீர தொலைபேசியில் விடுத்த அழைப்பின் பேரில் கந்துருஉடன்பட்டார்.

ரத்வத்தையின்மகன்மஹேன் அங்கு மனம்குழம்பிய நிலையில் இருந்தார்.

இரவு 11 மணியளவில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிரா மென்டிஸ் ரத்வத்தையை புலனாய்வுத்துறை தலைமை அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப் போவதாகத் தெரிவித்தார்.

கடைசியாக, 1.30 அதிகாலை 20ஆம் திகதி புதன்கிழமை ரத்வத்தை புலனாய்வுத்துறை தலைமை அலுவலகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு வைத்து அவரிடம் வாக்கு மூலம் பதியப்பட்டபின் அதிகாலை 3.00 மணிக்கு அவரை அவரது இல்லத்தில் கொண்டுபோய் விட்டார்கள்.

அப்போது ரத்வத்தையின் உடலில் நடுக்கம் ஏற்பட்டதாகவும், இன்சுலின் ஊசி போடவேண்டி ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### தெல்தெனியாவிற்கு

மறு நாள் காலை ஹவ்லொக் பார்க்கில் தயாராக நின்ற ஹெலிகொப்டர் மூலம் அவர் தெல்தெனியாவிற்குக் கொண்டு செல்லப்பட்டார். அவருடன்அவரதுமெய்ப்பாதுகாவலர் றோகன்சில்வா, அனில் ஒபயசேகரா, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிராமென்டிஸ், புலனாய்வுத்துறையினர் முதலியோர் சென்றனர்.

ஆகியோர் உட்பட50தொடக்கம் 60 வரையான ரத்வத்தையின் நண்பர்களும், சொந்தக்காரர்களும் அவரது இல்லத்தில் வந்து கூடிவிட்டார்கள். அனில் ஒபயசேகராவும் அவரது மகன்பிரசன்னாவும்அங்கு வந்து விட்டார்கள். அனில் ஒபயசேகராவை ரத்வத்தை தனது சட்ட ஆலோசகராக வைத்திருந்தார். அதனால் அவரும் மடவள படுகொலையில் பிரதான சந்தேகப் பேர்வழியாகக் கணிக்கப்பட்டிருந்தார். ரத்வத்தைக்கு சட்ட உதவி அளிப்பதற்காக சட்டத்தரணி திரந்தா வலியத்தாவும் சமுகமளித்திருந்தார்.

**தமிழில்: கபிலர்**

அப்போது ரத்வத்தை, புலனாய்வுத் துறையினர் தன்னை அழைத்துச் செல்ல முனைவதற்கு எதிராக ஆட்சேபனை தெரிவித்து அவர்களோடு பேசிக்கொண்டிருந்தார்.

தனது உயிர் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலால் பயங்கர அபாயத்தில் இருப்பதாக அவர்களுடன் அவர் வாதிட்டார்.

கண்டி தெல்தெனியவில் தன்னை நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்தால் அங்கு வன்செயல் வெடிக்கும் வாய்ப்பு இருக்கிறது என்று தான் மனங்குழம்புவதாக அவர் தெரிவித்தார்.

### மங்கள சமரவீரா

இவ்வாறு அங்கு எல்லோரும் பேசிக் கொண்டிருக்கும் போது மடவள கொலைகளில் கமுவே வஜிரதேரர் இன்னொரு பிக்குவுடன் அங்கு வந்து பிரித் ஓதிரத்வத்தைக்கு ஆசி வழங்கினார்கள்.

அப்போது இரவு 10.30 மணி புலனாய்வுத்துறையினர் அங்கிருக்கும் போது திரைப்படமாக்குவதற்குப் பொருத்தமான ஒரு நாடகம் நடை பெற்றுக் கொண்டிருந்தது.

### ஜனாதிபதி

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க ஒவ்வொரு 10 நிமிடங்களுக்கொரு தடவை அங்கு தொலைபேசியில் தொடர்புகொண்டேயிருந்தார். அவர் ரத்வத்தையுடன் ஒரு முறை பேசிக் கொண்டிருக்கும் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவோடும் பேசினார். உள்ளக அமைச்சர் ஜோன் அமரதுங்காவுடனும் பேசினார்.

ஜனாதிபதி ரத்வத்தையை வீட்டுக் காவலில் வைக்க முடியுமா என்று பிரதமரைக்கேட்டார். கொலை தொடர்பாக போதுமான சாட்சியங்கள் இருக்கும் நிலையில் வீட்டுக் காவலில் வைப்பதற்கு எமது நாட்டின் வழமையான சட்டத்தில் இடம் இல்லை என்றும் அதனால் பொலிஸாரிடம் எத்தகைய நிலையிலும் தலையிட முடியாதிருப்பதாகவும் பிரதமர் பதில் அளித்தார்.

அந் நிலையில் பிரதமர் ஜோன் அமரதுங்காவுடன் கலந்தாலோசித்த பின்னர் மறு நாள் ஹெலி மூலம் ரத்வத்தையை தெல் தெனியாவிற்கு கொண்டுசெல்வதற்கு

ஹெலி கொப்டர் தெல்தெனியா மகாவித்தியாலய மைதானத்தில் இறங்கியதும் பெருந்தொகையானபொலிஸ் படையினர் அப்பகுதியைச் சூழ்ந்து கொண்டனர்.

வத்தேகம, தெல்தெனிய பொலிஸார் ரத்வத்தைக்கு எதிராக வன்முறைக்கும்பல்களினால் ஏற்படக்கூடியஅபாயங்களிலிருந்து பாதுகாப்பதற்கு மனித கவசமாக அவரைச் சூழ்ந்து அவருடன் சென்றனர்.

மு. ப. 9. 30 மணிக்கு ரத்வத்தை தெல்தெனிய நீதிபதி பிறீதி இனோகா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். ஒபயசேகரா ரத்வத்தைக்கு எதிரான குற்றச்சாட்டை நிராகரிக்க வேண்டும் என்று நீதிபதி முன் வாதாடினார். அது வெற்றியளிக்க வில்லை. மார்ச் 4 ஆம் திகதி வழக்கு ஆரம்பிக்கும் வரை கொழும்பு வெலிக்கடை சிறையில் அவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

வெலிக்கடைக்குக் கொண்டு செல்லப்பட்ட ரத்வத்தை அங்கு பரிசோதனை செய்யப்பட்டதன் பின்னர் கொழும்பு தேசிய மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

---

## வீட்டுக்காணியில் துப்பாக்கி கண்டெடுப்பு

மட்டுவில் பகுதியில் வீட்டுவளவொன்றில் ரீ-56 ரக பழைய துப்பாக்கியொன்று கண்டெடுக்கப்பட்டதாக அரசாங்கதகவல்திணைக்களம் செய்திவெளியிட்டுள்ளது.

கடந்த முதாலம் திகதி மாலை 5.00 மணியளவில் மட்டுவில் பகுதியில் தனது வீட்டுவளவிலுள்ள தோட்டத்திற்கு நீர்பாய்ச்சிக் கொண்டிருந்த ஒருவர், அங்கு ரீ-56 ரக துப்பாக்கியொன்றினைக் கண்ட உடனே பக்கத்திலிருந்த இராணுவ முகாமில்அது குறித்து அறிவித்தார்;

அத்துப்பாக்கியை எடுத்துச் சென்ற இராணுவத்தினர், அதன் பாகங்களைக்கழற்றிய போது துருப்பிடித்து உபயோகிக்க முடியாத துப்பாக்கி எனத்தெரியவந்தது என்று அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

---

# யாழ். பல்கலையில் 21 ஆவது பட்டமளிப்பு விழா 16 ஆம் திகதி

## 691 பேருக்கு பட்டமளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் 21வதுபட்டமளிப்புவிழாஎதிர்வரும் 16ம் திகதிசனிக்கிழமை கைலாசபதி கலையரங்கில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் 5 அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

இப்பட்டமளிப்பு விழாவில் 691 பேர் பட்டம் பெறவுள்ளனர். இவர்களில் மூதறிஞர் க. சொக்கலிங்கம் (சொக்கன்) இலக்கியத்துறைக்கு ஆற்றிய பணியைகௌரவித்துகௌரவ கலாநிதிபட்டமும், பல்கலைக்கழக நாடக அரங்கியல் துறையின் சிரேஷ்டவிரிவுரையாளர் கந்தசாமி சிதம்பரநாதனுக்கு முது தத்துவமாணிப் பட்டமும் வெளிவாரி மாணவர்கள் 65பேருக்கும்இப்பட்டமளிப்பு விழாவில் பட்டங்கள்வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த 144 பேரும் விவசாய பீடத்தைச் சேர்ந்த 29பேரும் விஞ்ஞான பீடத்தைச்சேர்ந்த 22 பேரும் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 57 பேரும்

(2ம்-பக்கம் பார்க்க)

---

## செயன்முறைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முதலாம் கட்ட அபிவிருத்தித் தொண்டர்களுக்கான செயன்முறைப் பரீட்சை எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கு முன்னர், சம்பந்தப்பட்ட மாணவர்களை நல்லூர் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு உதவி திட்டமிடல் பணிப்பாளர் ரவீந்திரசர்மா கேட்டுள்ளார். (உ-5)

# நோர்வேயை அழைத்த ஜனாதிபதியே அதை கண்டிப்பதுவேடிக்கையானது

## நீதிஅமைச்சர் லொக்குபண்டா விசனம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு மத்தியஸ்தம் வகிக்குமாறு நோர்வேக்கு முதலில் அழைப்புவிடுத்தவர் ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவே. அதற்கான முன்முயற்சியை, நோர்வே பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்திலேயே ஆரம்பித்தது. ஆனால் தற்போது நோர்வேயின் மத்தியஸ்தத்தை ஜனாதிபதி கண்டித்து குறை கூறுவது வேடிக்கையாக உள்ளது.

இவ்வாறு நீதிஅமைச்சர் லொக்குபண்டார விசனம் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் மத்தியஸ்தத்தைகண்டித்து ஜனாதிபதி கடிதமொன்றை பிரதமருக்கு அனுப்பியமை தொடர்பாகக் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி சந்திரிகா ஆரம்பித்துள்ள சமாதான வழியை பின்பற்றியே ஐக்கிய தேசியமுன்னணி அரசாங்கம் அதற்கான நடவடிக்கையை தற்போது மேற்கொண்டு வருகின்றது.

இந்நிலையில் ஜனாதிபதி இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவது அவரது இரட்டைவேடத்தைவெளிப்படுத்துவதாகஉள்ளது என்றும் நீதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

## நடமாடும் செயலக சேவை

அரசின் நூறுநாள் வேலைத்திட்டத்தின் கீழ் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மல்லாகத்தில் நடமாடும் பிரதேச செயலக சேவை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் ஆரம்பமாகும் இச்சேவை பிற்பகல் 2.00மணிவரைநடைபெறும்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்கள் இச்சேவையில் கலந்து பயனடையலாம் என தெரிவிக்கப்படுகிறது. (உ- 12)

## இதுவரை 180 தேர்தல் வன்முறைகள்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து நேற்று முன்தினம் காலை வரை 180 தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றதாக தேர்தலைக் கண்காணிக்கும் பொலிஸ் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி 80 முறைப்பாடுகளையும், பொதுஜன ஐக்கியமுன்னணி 60 முறைப்பாடுகளையும், ஏனையவை ஜே. வி. பியினாலும் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமைச் செயலகம் மேலும் அறிவித்துள்ளது. (உ-4)

## சாவகச்சேரி நவீன சந்தை புனரமைப்பு ‘றான்’ பொறுப்பேற்பு

(தென்மராட்சி)

யுத்தத்தினால் சேதமடைந்த நிலையிலுள்ள சாவகச்சேரி நவீன சந்தையின் கட்டடத் தொகுதியை ‘றான்’ அமைப்பு முழுமையாகப் புனரமைப்புச் செய்வதற்கு முன்வந்துளதாக அவ்வமைப்பின் பிரதம பொறியியலாளரான எஸ். கிரிதரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நவீன சந்தையில் திண்டிருந்த நகர வர்த்தகர்கள் மத்தியில் அவர் மேலும் குறிப்பிடுகையில்:

இச்சந்தையின் புனரமைப்புப் பணிகளை உடன் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளேன். அதன் பொருட்டு சந்தையில் சேதமடைந்த நிலையில் இருக்கும் கட்டடத்தைத் திருத்தி கூரை போடும் வேலைகளை ஆரம்பித்துள்ளோம். அதேபோல சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையையும் ‘றான்’ புனரமைப்புச் செய்து வருகின்றது.

எமது பணிகள் துரிதமாக இடம்பெறுவதற்கு சாவகச்சேரி நகர வர்த்தகர்கள் தம்மாலான ஒத்துழைப்பை எமக்கு வழங்க வேண்டும் எனக்கேட்டுக் கொண்டார்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் என். சற்குணராஜா, செயலாளர் டாக்டர். எஸ். எஸ். அருளானந்தம் ஆகியோரும் அங்கு கருத்துரை வழங்கினர். (உ- 77)

## சந்திரிகா பதவியில் இருக்கும்வரை சமாதான நடவடிக்கைகளுக்கு தடையாக இருப்பார்

### லண்டன் தமிழ்ச்சேவைக்கு தமிழ்ச்செல்வன் செவ்வி

(வவுனியா)

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பேரினவாத எண்ணம் கொண்டவர் என்பதைகடந்த கால நடவடிக்கைகள் மூலம் நிரூபித்துள்ளார்.

தமிழர்களுக்கு உரிமைகளை வழங்க மனதளவில்கூட விரும்பாத இவர், பதவியில் இருக்கும் வரை சமாதான நடவடிக்கைகளுக்குத் தடையாக இருப்பார் என தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் அண்மையில் லண்டன் செய்திச்சேவை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் பேட்டியளிக்கையில்;

இன்றுள்ள சூழ்நிலையில் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரால் புரிந்துணர்வு உடன்படிக்கையை எதுவும் செய்ய முடியாது.

மக்கள் ஆணைப்படியே ரணில் விக்கிரமசிங்க அரசு சமாதான முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது

ஸ்ரீலங்கா அரசியலமைப்பில் சர்வாதிகாரம் கொண்டவர் ஜனாதிபதி. புரிந்துணர்வு உடன்படிக்கை நீதியானதும் நியாயமானதாகவும் உள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா இந்த ஒப்பந்தத்தை எதிர்க்கும் சூழ்நிலை இருந்து கொண்டே இருக்கும்.

இதற்கான ஆரம்பநடவடிக்கையையே நாம் தற்போது பார்க்கின்றோம் என்று குறிப்பிட்டார்.

முஸ்லிம் மக்களின் மீளக்குடியமர்வு தொடர்பாக கருத்து கூறுகையில்;

முஸ்லிம் மக்கள் சொந்த மண்ணில் மீளக்குடியமர்வது அவர்களது உரிமையாகும்.

அவர்களது கோரிக்கை நியாயமானதுங் கூட.

பாரம்பரியமான வடக்கில் அவர்கள் எங்கெங்கு வாழ்ந்தார்களோ அங்கெல்லாம் வாழும் உரிமை அவர்களுக்கு உண்டு.

இப்போது அரசியல் தீர்வு நோக்கிய பயணத்தின் முதலாவது படியில் உள்ளோம். பேச்சுவார்த்தை உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் செல்லும் போது முஸ்லிம்களின் கோரிக்கையை கருத்தில் எடுத்து நியாயமான தீர்வைக் காண்போம்.

துரதிர்ஷ்டவசமான சந்தேகத்தினால் தான் யாழ் முஸ்லிம்கள் இடம்பெயரவேண்டி வந்தது என்று தெரிவித்தார். (உ)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சீர்குலைக்கும் வகையில் செயற்படக் கூடாது

### நோர்வே தூதர் செய்தியாளரிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

நிரந்தர சமாதானத்தை இலங்கையில் ஏற்படுத்துவதற்கு பலமுனைகளிலிருந்தும் பங்களிப்புகள் வழங்கப்பட வேண்டும். முக்கியமாக ஊடகவியலாளர்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச்சீர்குலைக்கும் வகையில் செயற்படக் கூடாதுஎன்று நோர்வே தூதுவர் ஜோன்வெஸ்பேர்க் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கிலிருந்து சென்றஊடகவியலாளருக்கு வரவேற்பளிக்கும் வைபவம் ஒன்றினை தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் தனது வாசஸ்தலத்தில் கடந்த செவ்வாய் ஏற்பாடு செய்திருந்தார்.

அவ்வைபவத்தில் ஊடகவியலாளர்கள் அவருக்கு ஒரு நினைவுச் சின்னத்தை அன்பளிப்பாக வழங்கினார்கள். அதற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த சமாதான முயற்சி சீர்குலைந்தால் மீண்டும் அழிவுகள் தான் ஏற்படும். எனவே சமாதானத்திற்கான தேவையைக் கருத்தில் கொண்டுசெயற்படுவது அவசியமாகும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும்போது அரசும் விடுதலைப் புலிகளும் சவால்களை எதிர்நோக்கவேண்டி வரும். எனவே இருதரப்பும் நேர்மையாக நடந்துகொள்ளும்என்று தான் நம்புவதாக அவர் மேலும் பேசுகையில் தெரிவித்தார்.

இந்தவைபவத்தில் சிங்கள ஊடகவியலாளர்கள் மற்றும் இராணுவப்பேச்சாளர் சரத் கருணாரத்னா, உட்படபலர் கலந்துகொண்டனர்.

இதற்குமுன்வடக்கு-கிழக்கு பத்திரிகையாளர் குழு பாராளுமன்றத்திற்குச் சென்றபோது, அரசாங்க பாராளுமன்ற குழுத்தலைவரும் தொழிற்பயிற்சி அமைச்சருமான மகிந்த சமரசிங்க அவர்களைவரவேற்று மதியவிருந்தளித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (எ)

## ஆஸ்பத்திரி சீரில்லை யாழ். எம். பிக்கு மகஜர்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் குருநகர் அரசினர் வைத்தியசாலையின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அதை நிவர்த்தி செய்ய உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரும் மகஜர் ஒன்று கடந்தமாதப் பிற்பகுதியில் குருநகர் அரசினர் வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவால் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ. ஜீ. கஜேந்திரகுமாருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இம் மகஜரில் பின்வரும் விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

- வைத்திய சாலையில் போதிய மருத்துவப்பொருட்கள்வசதி இல்லாதுள்ளது.
- மருத்துவமாது எவரும் இல்லாதுள்ளது.
- மருத்துவ மாது தங்கும் அறைதுர்நாற்றம் வீசுகிறது.
- இருந்த இரு வைத்தியர்களில் ஒருவர் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளதாலும் மற்ற வைத்தியர்பாடசாலை மருத்துவ பணிகளுக்கு செல்வதாலும் பொதுநோயாளர்கள் ஒழுங்காக சிகிச்சைபெறமுடியாதுள்ளது.

மேற்குறிப்பிட்ட குறைபாடுகளை உடன் நீக்கி தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு அபிவிருத்திகுழுவின் செயலாளர் மோ. எட்வேட்டினால் கையொப்பமிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (க59

## மைதானத்தில் பெறும் அனுபவங்கள் எதிர்கால வளத்திற்கு வித்திடும்

### உடற்கல்வி சேவைக்கால ஆலோசகர் தெரிவிப்பு

(ஊர்காவற்றுறை)

மாணவர்கள் மைதானத்தில் பெறும் அனுபவம் எதிர்காலத்திற்குவழிகாட்டியாக அமையும்எனதீவக கல்விவலய உடற்கல்விச் சேவைக்கால ஆலோசகர் எஸ்.என். லோகநாதன் தெரிவித்தார்.

யா/ ஊர்காவற்றுறைபுனித மரியாள் மகளிர் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலையின் அதிபர் அருட்சகோதரிதிரேசா சில்வா தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே உடற்கல்வி சேவைக்கால ஆலோசகர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்; ‘‘மாணவர்கள் மைதானத்தில் பெறும் அனுபவங்களே எதிர்காலத்தில் குடும்பங்களையும் கிராமங்களினையும் கட்டியெழுப்புவதற்கு பெரும்பங்களிப்பினை வழங்கும், மைதானத்தில் வெற்றி தோல்வியினை ஏற்று விட்டுக்கொடுக்கும் மனப்பாங்குடன் செயற்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இவ் இல்லமெய்வல்லுநர் போட்டியில் தீவகவலயக் கல்விப்பணிப்பாளர். ப. விக்கினேஸ்வரன், ஊர்காவற்றுறை பங்குத்தந்தை வண பிதா. எ. ஞானப்பிரகாசம், முன்னாள் பங்குத்தந்தை வண பிதா. எஸ். அன்ரனிபாலா ஆகியோரும் கலந்துகொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கிக் கொளரவித்தார். (க-75)

## கண்டிப்புடன் செயற்பட பிரதமர் ரணில் தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் நூறுநாள் வேலைத்திட்டத்தின் கீழ் முன்னேற்றத்தை வெளிப்படுத்தாத அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் உப நிறுவனங்களில் கடமையாற்றும் அதிகாரிகள் தொடர்பாக கண்டிப்புடன் செயற்பட பிரதமர் ரணில் தீர்மானித்துள்ளார்.

நாளை நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் அவ்வவ் அமைச்சுக்கள் பெற்றுள்ள முன்னேற்றங்கள் குறித்து விளக்கமளிக்க வேண்டுமென்று பிரதமர் அமைச்சர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி நேர்மையாகக் கடமையாற்றாத அதிகாரிகள் மீது ஒழுக்காற்றுநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரியவருகிறது. (உ)

## விண்ணப்பம் கோரல்

(கல்வயல்)

அரச மாகாண சேவையில் நிரந்தர சிற்றூழியர்களாக பதவி உறுதிப்படுத்தப்பட்டு, 3 வருடங்களுக்கு மேல்சேவையாற்றியோரிடமிருந்து எழுதுவினைஞர் தரம் 2 ‘ஆ’ தட்டெழுத்தாளர் தரம் 2 ‘ஆ’ ஆகிய பதவிகளுக்கு நியமிக்கப்படுதவற்கானமட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (உ-111)

# உலக உணவுத் திட்டத்தின் பார்வை ஆப்கான் பக்கம்

## இலங்கை அகதிகள் நெருக்கடியில்

(கொழும்பு)

உலக உணவுத்திட்டத்தின் இலங்கைக்கான உணவுவிநியோகம் முற்றாக ஸ்தம்பிதமடையும் நிலைஏற்பட்டிருப்பதாக இலங்கைக்கான உணவுத்திட்ட இயக்குநர் ஜெவ் ராவ்டிக் எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்தவருடப் பிற்பகுதியில் ஆப்கானில் போர்ஆரம்பமானதைத் தொடர்ந்து உலகஉணவுத் திட்டத்தின் பார்வை ஆப்கான் பக்கம் திரும்பியுள்ளது.

இதனால் இலங்கையின்உள்நாட்டுப் பிரச்சினையால் தமது உடைமைகளை இழந்து உள்ளூரிலேயே அகதிகளாக முகாம்களில் வாழும் 77 ஆயிரம்பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்றுமாதங்களாக இவர்களுக்கான உணவு விநியோகம் வீழ்ச்சிகண்டுள்ளது. இது மனித உரிமைகளைப் புறக்கணிக்கும் செயலாகும்.

இவ்வாண்டு இலங்கையிலுள்ள அகதிகளுக்கு விநியோகிக்க 15ஆயிரம் தொன் உணவுப்பொருட்கள் தேவையான போதும் 2ஆயிரத்து 500தொன் உணவுப்பொருட்களை அதாவது தேவையானதில் 15வீதமானதை மட்டுமே வழங்க உணவுத்திட்டம் முன்வந்துள்ளது என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# இத்தாலி பயணப்படவிருந்த படகு மீட்கப்பட்டது

சட்டவிரோதமாக இத்தாலிக்குப் பயணம்செய்யவிருந்த படகு ஒன்றை நீர்கொழும்பு பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

நீர்கொழும்பு துறைமுகத்திற்கு அருகே நங்கூரமிடப்பட்டிருந்த இப்படகில்60பயணிகளின் பைகளும் வேறுசில பயணப்பொருட்களுமிருந்ததாக நீர்கொழும்பு பொலிஸ் நிலையபொறுப்பதிகாரி கம்மிக்க தயாரத்ன தெரிவித்துள்ளார்.

இப்படகின் உரிமையாளர் தப்பிச் சென்றுவிட்டதாகவும் அவ்வதிகாரி மேலும்தெரிவித்துள்ளார். (உ-8)

### நாட்டை பிரிக்காமல்

# அதிகாரத்தை மட்டுமே பகிர்ந்தளிக்கவுள்ளோம்

## அமைச்சர் திஸநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

'நாட்டை துண்டுபோடாமல் பிரித்துக் கொடுக்காமல் அதிகாரங்களை மாத்திரமே பகிர்ந்தளிக்கவுள்ளோம்'

இவ்வாறு விவசாய கால்நடை அபிவிருத்தி சமுர்த்தி அமைச்சர் எஸ். பி. திஸநாயக்கா நுவரெலியாமாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த ஆறுமுகம் தொண்டமான் வடக்கு-கிழக்கிற்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதியிடம் அனுமதி கேட்டார். ஆனால் அவர் அனுமதி வழங்கவில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டபொழுது அவர் ஆறுமுகம்தொண்டமான்வடக்கு-கிழக்குப் பகுதிக்குச் சென்று தமிழ் மொழியிலேயே பேசும்படி கூறி அனுப்பி வைத்தார்.

இந்தக் கொடிய யுத்தத்தை நிறுத்தாவிட்டால் இந் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. இந்த நாட்டில்சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய தலைவர் ரணில்விக்கிரமசிங்க மாத்திரம் தான்என்றும்அவர் மேலும் தெரிவித்தார். (செ)

# சொந்த இடத்தில் நூலகம் இயங்குகிறது

(மந்திகை)

சாவகச்சேரி பொதுநூலகம் கடந்த 2 வருடங்களின் பின்னர், இம்மாதம் முதலாம் திகதிமுதல் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

மேற்படி நூலகச் சொத்துக்கள் யாவும் களவாடப்பட்டதைத் தொடர்ந்து 15 இலட்சம் ரூபா செலவில் புதிதாக தளபாடங்கள் மற்றும் நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி நூலகத்திற்கு கொழும்பு நூலகஅபிவிருத்திச்சபை 500 அமெரிக்கடொலர் பெறுமதியான ஆங்கில நூல்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

# பரமானந்தா ஆசிரமத்தில் இலவச வைத்திய சேவை

(மந்திகை)

வதிரி சத்திய சாயிபாபா சேவை நிலையத்தினால் பரமானந்தா ஆச்சிரமத்திலுள்ள முதியோர் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட 50 பேருக்கு அண்மையில் இலவச வைத்திய சிகிச்சையளிக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற டாக்டர் எஸ். வேலும்மயிலும் சிகிச்சைகளை வழங்கினார்.

ஒவ்வொரு மாதத்திலும் முதலாவது சனிக்கிழமை இவ்வாறு இலவச சிகிச்சை முகாம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

### ஊர்காவற்றுறை

# கடற்றொழிலாளர்களுக்கு மீனவர் அ.அட்டை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மற்றும் வேலணைப் பகுதிகளிலுள்ள கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை கடற்படையினரால் மீனவர் அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது.

பாஸ் நடை முறையினால் எதிர் நோக்கும் சிரமங்களைத் தவிர்க்கும் பொருட்டே இந்த அடையாள அட்டை வழங்கப்படவுள்ளதாகவும்,

இவை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களினூடாக வழங்கப்பட விருப்பதாகவும் தெரிய வருகின்றது. (உ-5-75)

### சென்னை, புதுடில்லி நகரங்களில்

# இலங்கைக் கடற்படைக்கு எதிராக இந்.மீனவர் ஆர்ப்பாட்டத்துக்கு முடிவு

(கொழும்பு)

இந்தியக் கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப் படுவது மற்றும் காரணமின்றிக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவது ஆகியவற்றைக் கண்டித்து அகில இந்திய மீனவர் சங்கத்தின் ஏற்பாட்டில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறவுள்ளன

இந்த வகையில் எதிர்வரும் 10ஆம் திகதி சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பாகவும், 12ஆம் திகதி புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பாகவும் ஆர்ப்பாட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அகில இந்திய மீனவர் சங்கம்விடுத்துள்ள அறிக்கையில்,

கடந்த 15ஆம் திகதி நாகபட்டணத்தில் இருந்து 2 விசைப்படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 12 இந்திய மீனவர்கள் இலங்கைக்கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாண சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்கள் மீது இவ்வாறான அட்டூழியங்கள் இலங்கைக் கடற்படை புரிவது இன்று நேற்றல்ல, பல காலங்களாகவே தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இதனைக் கண்டும் காணாதது போல் இந்திய மத்திய அரசும் தமிழக மாநில அரசும் மௌனமாய் இருந்து வருகின்றன.

இதுவரை இலங்கைக் கடற்படையினரால் 200 இந்திய மீனவர்கள் கொலைசெய்யப்பட்டுள்ளதுடன் நூற்றுக் கணக்கானோர் துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்துள்ளனர்.

இது இந்தியாவின் தன்மானப்பிரச்சினை காஷ்மீர்எல்லையை உயிரைக் கொடுத்தும் இந்தியர்காப்பதுபோன்று இந்தக் கடல் எல்லை விவகாரத்தையும் கையாள வேண்டுமென்று அவ் வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## மகளிர் தின நிகழ்வு

(ஏழாலை)

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் மகளிர் தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

கட்டுரை, தையல், உணவு தயாரித்தல், கோலம், தலை அலங்காரம் என்பவறில் போட்டிகள் நடத்தப்படவுள்ளதுடன் மார்ச் 8ம் திகதி பிரதேச செயலகத்தில் மகளிர் தினநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (உ-12)

# இராசி பலன்

15.3.2002

(மாசி 21, செவ்வாய்)

சப்தமி பி. இ1.40வரை

அனுசம் பி.இ4.11வரை

ராகுகாலம்-3.26-4.56

நல்லநேரம்-10.56-12.26

சித்தம்

**மேடம்**

தேவையற்ற பிரச்சினை, உடல் வியாதி, காரிய தாமதம், பிரயாண பயம்.

**இடபம்**

காரிய அனுகூலம், கௌரவம், தொழில் லாபம், திடீர் பயணம்.

**மிதுனம்**

முயற்சி பலிதம், தொழில் முன்னேற்றம், மனமகிழ்ச்சி, திடீர் நன்மை.

**கடகம்**

குடும்ப மனஸ்தாபம், அபகீர்த்தி, காரிய தாமதம், வியாபார நன்மை.

**சிங்கம்**

முயற்சி தாமதம், ரோக பயம், திடீர் நன்மை, கௌரவக் குறைவு.

**கன்னி**

காரிய நன்மை, வாக்குப் பலிதம், சுவாரஸ்யம், தன வரவு.

**துலாம்**

பொருள் விரயம், இனசனத் தொடர்பு, மாதர் நட்பு, தேவையற்ற வாதம்.

**விருச்சிகம்**

காரிய அனுகூலம், உடல் ஆரோக்கியம், இலட்சுமீகரம், சயன சுகம்.

**தனுசு**

வீண் அலைச்சல், சகோதரர் உதவி, சுப செலவு, உணர்ச்சி வசப்படல்.

**மகரம்**

குடும்பச் சந்தோசம், காரிய சித்தி, கீர்த்தி, தனலாபம்.

**கும்பம்**

கடின முயற்சி, தூரதேசச் செய்தி, சந்தோசமான சம்பவம், காரியம் கைகூடும்.

**மீனம்**

கட்டுப்பாடு, காரியதாமதம், நண்பர்கள் விரோதம், பிரயாணம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# ஐக்கிய இராச்சியத்தின் இலங்கைக்கான உயர் ஸ்தானிகராக ஸ்ரீபன்

(கொழும்பு)

பெரிய பிரித்தானியாவும் வட அயர்லாந்தும் இணைந்த ஐக்கிய இராச்சியம் தனது இலங்கைக்கான உயர்ஸ்தானிகராக ஸ்ரீபன் ஈவான்ஸ் என்பவரை நியமித்துள்ளது.

இவர் இப்போது கொழும்பில் உயர்ஸ்தானிகராகவுள்ள திருமதி லின்டா டபீல்ட்இன் இடத்துக்கே நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனை இலங்கை வெளியுறவு அமைச்சின் செய்தி வெளியீடு தெரிவித்துள்ளது. (உ)

## மக்கள் வங்கிச் சஞ்சிகை வெளிவரும்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியினால் மாதாந்தம் வெளியிடப்படும் 'மக்கள் வங்கியும் நீங்களும்' என்ற சஞ்சிகையின் மார்ச் மாதத்திற்குரிய சஞ்சிகையில் யாழ்ப்பாண வங்கிகளைப் பற்றிய விபரங்கள் இடம் பெற்றுள்ளன. இச் சஞ்சிகை விரைவில் வெளிவரவுள்ளதாக மக்கள் வங்கிவட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5-19)

### தென்மராட்சியில்

## சிரமதானம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையும், சுகாதார வைத்தியஅதிகாரி அலுவலகமும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன.

இப்பணியில் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன், தமிழர் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான என். ரவிராஜ் மற்றும், புளொட், ஈ. பி. ஆர். எல். எவ். (வரதர் அணி), ஐக்கியதேசியக்கட்சி, தமிழர் கூட்டமைப்பு ஆகிய அரசியல் அமைப்புக்களைச் சேர்ந்த தலைவர்களும் தொண்டர்களும் ஈடுபட்டிருந்தனர்

இவர்களுடன் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் மருத்துவமாதுக்கள் தொண்டர்கள், சாவகச்சேரி பிரதேச சபை, சாவகச்சேரி லயன்ஸ்கழகம், அறவழிப் போராட்டக் குழு தென்மராட்சி மக்கள் நலச் சேவைச்சங்கம், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் ஆகிய பொது அமைப்புக்களைச் சார்ந்தவர்களும் பங்குகொண்டிருந்தமைகுறிப்பிடத் தக்கதாகும். (உ-77)

## ஆலோசனை வகுப்பு

(தென்மராட்சி)

உள்ளூராட்சித் தேர்தலில் அஞ்சல்மூலம் வாக்களிக்கும் உத்தியோகத்தர்களைஉறுதிப்படுத்துவது தொடர்பான ஆலோசனை வகுப்பு நேற்று யாழ் செயலகத்தில் பதில் அரசஅதிபர் திருமதி திலகநாயகம்போல் பத்தினியம்மா தலைமையில் நடைபெற்றது.

பல்வேறு திணைக்களங்களையும் சேர்ந்த சுமார்75 பேர் இவ்வகுப்பில் கலந்து கொண்டனர்.

இதேவேளை உள்ளூராட்சித் தேர்தலை யாழ்மாவட்டத்தில் மார்ச்25ஆம் திகதி நடத்துவது என்ற முன்னைய அறிவிப்பில் தமக்கு இதுவரை எந்த மாற்றமும் அறிவிக்கப்படவில்லை என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-77)

## உதைபந்தாட்ட குழு நிலை தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர்சங்கத்தின் ஈ. கே. குமரையா ஞாபகார்த்தஉதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் குழு நிலைத் தெரிவுப் போட்டி இன்று பி.ப 4.30 மணிக்கு யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் குருநகர் சென் றோக்ஸ் அணியைஎதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (இ-5-110)

## விஷ்ணு புராண சொற் பொழிவு

(அரியாலை)

யாழ் வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும்ஞாயிற்றுக் கிழமைவரை இடம்பெறும் இலட்சார்ச்சனையை முன்னிட்டு தினமும் மாலை 6. 30மணி தொடக்கம் மாலை 7. 30மணி வரை பிரம்மஸ்ரீ காரை கு. சிவராஜசர்மா விஷ்ணு புராணம் எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (செ-225)

இலங்கை இந்துமத குருபீடாதிபதி சிவாகம ஞானி
அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின்
5 - வது ஆண்டு ஞாபகார்த்தமாக
சர்வதேச இந்துமத குருபீட யாழ். மாவட்ட
அமைப்பாளர்களின் ஏற்பாட்டில்

# நல்லை ஆதீனத்தில்

# ஆன்மீகப் பெருவிழா

காலம்: 28-03-2002 வியாழக்கிழமை பி. ப 2.30 மணி முதல் நல்லை ஆதீன இரண்டாவது குருமஹா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகளின் அருளாசியுடன்

**'சர்வதேச இந்துமத குருபீடாதிபதி'**
**இலங்கை பிராம்மண சமாஜத்தின் தலைவர்**

## கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார்

தலைமையில் ஆன்மீகப் பெருவிழா நடைபெறும்

விழாவில் சிவாச்சாரியார்கள் சமயப் பிரமுகர்கள் நாநஸ்வர- தவில் கலைஞர்கள் சிற்பக்கலைஞர்கள் சமூகப் பிரமுகாகள் 50 பேர் பொன்னாடை போர்த்தி பட்டம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

**பிரதம அதிதிகள்**

''பிரதிஷ்டா சிரோமணி''
பிரம்மஸ்ரீ சாயி விஸ்வநாதக்குருக்கள் அவர்கள்
(நவாலியூர்) - (கொழும்பு)

சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் அவர்கள்
(கீரிமலைச் சிவன்கோவில்)

சிவஸ்ரீ ஐ. மகேஸ்வரக் குருக்கள் அவர்கள்
(குருபீடாதிபதி - இந்துக்குருமார் ஒன்றியம்)

சிவஸ்ரீ மு. பரமசாமிக் குருக்கள் அவர்கள்
('பிரதிஷ்டா கிரியா கலாமணி' - வட. கோவை)

'மஹாராஜஸ்ரீ'
து. ஷண்முகநாதக்குருக்கள் அவர்கள்
(மாவை ஆதீனம்)

சிவஸ்ரீ தாணு- மகாதேவக் குருக்கள் அவர்கள்
(அதிபர் - தர்மசாஸ்தாகுருகுலம்) (இணுவில்)

சிவஸ்ரீ நா, சர்வேஸ்வரக் குருக்கள் அவர்கள்
(பிரதமகுரு - சுன்னாகம் சிவன்கோவில்)

சிவஸ்ரீ கு ஜெகதீஸ்வரக் குருக்கள் அவர்கள்
(சித்தாந்த பானு - புன்னாலைக்கட்டுவன்

**விஷேட அதிதிகள்**

**இந்துசமய கலாசார அமைச்சர்**
கௌரவ தி. மகேஸ்வரன் அவர்கள்
(யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்)

**சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி**
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் J. P.
(தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்)

பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணா ஐயர் அவர்கள்
(யாழ். பல்கலைக்கழகம் இந்து நாகரிகத்துறை)

சர்வதேச இந்துமத குருபீடம் அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தாபீடம் இணைந்து நடாத்திய சமய - இலக்கிய அறிவுப்போட்டியில் சித்திபெற்ற
யாழ். மல்லாகம் மகாவித்தியாலய மாணவர்கள் யாழ் - சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக்கல்லூரி மாணவர்கள் யாழ் மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகள் யாழ் - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய மாணவர்கள்
ஆகியோருக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்

சுபம்

பிரம்மஸ்ரீ முத்தையா குருக்கள்
நாகேந்திர சர்மா (மல்லாகம்)
(அமைப்பாளர் யாழ். மாவட்டம்)

சிவஸ்ரீ சிவ. நித்தியானந்த சிவாச்சாரியார்
(சங்கானை)
(பிரதம அமைப்பாளர் - யாழ். மாவட்டம்)

## சர்வதேச இந்துமத குருபீடம்

(அரச அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனம்)
**751 A, புளூமென்டால் றோட், கொழும்பு - 15**
T/P 072 422239 Fax 527025

(சி-3644)

## இன்று ஒரு தகவல்

# கவிதையில் தெரியும் காட்சி

நாம் யார்? நமது தகுதி என்ன? என்கிற நினைப்பு எப்போதும் நமக்கு இருக்க வேண்டும். தகுதிக்கு மீறிய நினைப்புத் தான் பல சமயங்களில் நம்மைச் சிக்கலில் கொண்டுபோய் விட்டுவிடுகிறது. ஒரு பூனை இருந்தது. அது தன்னை ஒரு புலி என்று நினைத்துக் கொண்டிருந்தது. தன்னைப்பற்றிய தகுதிக்கு மீறிய நினைப்புடன் அந்தப் பூனை நடந்து போய்க் கொண்டிருந்தது. அப்போது வழியில் ஒரு பெரியயானை அமைதியாக நின்று கொண்டிருக்கின்றது. அந்த யானை பொறுமையாகநின்றுகொண்டிருப்பதனால்இந்த பூனைக்கு அதனிடம் போய்க் கொஞ்சம் வாலாட்டிப் பார்க்கலாமென்று ஆசை, இது உலக இயல்புதானே?

இந்தப் பூனை மிகவும் நல்ல பிள்ளை மாதிரி அந்த யானை இருக்கிற பக்கமாகப் போகிறது. அதைச் சுற்றிச் சுற்றி வருகிறது. உற்றுப்பார்க்கிறது. வாய் துருதுருக்கிறது. வம்பு வளர்க்க ஆரம்பிக்கிறது. அந்த யானையிடம் போய் எல்லோருக்கும் ஒரு பக்கம்தான் வால் இருக்கும். ஆனால் உனக்கு என்ன இப்படி? இரண்டுபக்கமும்வாலா? என்கிறது. வேண்டாத வேலை தானே இது? இருந்தாலும் அந்த யானை பொறுமையாகப் பதில் சொல்கிறது, 'அப்படி இல்லை! பின்னால் இருப்பதுதான் வால், முன்னால் இருப்பது தும்பிக்கை' என்கிறது. அத்துடன் விட்டுவிடவேண்டியது தானே? விடவில்லை இந்தப் பூனை!

'அது சரி! தும்பிக்கை ஏன் அப்படி உருண்டையாக இருக்கிறது? அது எதற்கு என்கிறது. இதற்கும் அந்தயானை பொறுமையாகவே பதில் சொல்கிறது. 'ஓ அதைக்கேட்கிறாயா? ஊற்றில் தண்ணீர் இருக்குமல்லவா? அதை உறிஞ்சிக் குடிப்பதற்காக அப்படி இருக்கிறது என்றது. 'சரி! எல்லாருக்கும் பல்லு வாய்க்குள் தான் இருக்கும். உனக்கு என்ன வெளியில் இருக்கிறது. அதுவுமல்லாமல் இவ்வளவு பெரிதாக, நீளமாக இருக்கிறது என்று கேட்டது பூனை. 'அதுவா ஒரு புலி என்னிடம் வந்து வாலாட்டுகிறது என்று வைத்துக் கொள். அந்தச் சமயத்தில் அதைத் தாக்குவதற்காக இது இப்படி இருக்கிறது. என்றது இதைக் கேட்டதும் பூனை விழுந்து விழுந்து சிரிக்கஆரம்பித்து விட்டது. மலை எங்கேயாவதுபாய்வதுண்டா? நீயோ கறுப்பாகப் பெரிதாக இருக்கிற மலை, உன்னால் எப்படிப் பாய முடியும்? அது முடியாத காரியம் என்று சொல்லிவிட்டு மறுபடியும் சிரிக்கிறது.

'என் உடலைப் பார்த்து விட்டுத்தானே மலை என்று சொல்கிறாய்; நான் பாய வேண்டிய அவசியம் இல்லை. இப்போது உன்னைப் பாய வைக்கிறேன் பார்!' என்று சொல்லிவிட்டு அந்தப் பூனையைத் தும்பிக்கையால் அலட்சியமாக தூக்கி எறிந்தது யானை. எங்கேயோ போய் விழுந்த அந்தப் பூனை! அப்பாடா! என்று இடுப்பைப் பிடித்துக் கொண்டே எழுந்து நின்று பார்க்கிறது. தூரத்தில் அந்த யானை இன்னமும் பொறுமையாக, ஆனால் கம்பீரமாக நின்று கொண்டிருந்தது. இப்போது தான் அந்தப் பூனைக்கு ஞானோதயம் பிறக்கிறது. யானை பாய வேண்டிய அவசியமில்லை. அதற்கு நீளமாகத் தும்பிக்கை இருக்கிறது. என்பதைப் புரிந்து கொள்கிறது. 'வலியாரிடம் வாயாடக் கூடாது' என்கிற பாடத்தைப் பூனை கற்றுக் கொண்டது. இந்தக் காட்சி பாவேந்தர் பாரதிதாசன் கைவண்ணத்தில் ஒரு கவிதையாக உருவெடுத்து வருகிறது.

'இரண்டு பக்கமும் வாலா
என்றது பூனை
எதிரிலே தும்பிக்கை
என்றது யானை
உருண்ட துதிக்கை
ஏனோ என்றது பூனை
ஊற்று நீரை உறிஞ்ச
என்றது யானை.
திரண்டு நீண்ட பல்
ஏன் என்றது பூனை
சீறும் புலியைத் தாக்க
என்றது யானை
இருண்ட மலை பாயா
தென்றது பூனை
எடுத்தெறிந்தது பூனை
யைப் போய் யானை'

இந்தக் கவிதையிலே ஒரு பாடமும் இருக்கிறது. படமும் இருக்கிறது. அதாவது இதைப் படிக்கவும் முடிகிறது. பார்க்கவும் முடிகிறது. வலியாரிடம் வாயாடக் கூடாது என்பது சின்னப் பிள்ளைகள் மட்டுமல்ல இந்தக் காலத்தில் பெரியவர்களும் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு பாடம்.

ஒருவன் அப்படித்தான் ஆற்றங் கரையில் பொறுமையாக உட்கார்ந்து கொண்டிருந்த இன்னொருவனைப் போய்த் தலையிலே குட்டினான். அவன் உடனே ஒரு ரூபாயை எடுத்து இவன் கையில் கொடுத்தான். இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் இந்த ஊரில் இப்படி ஒரு வழக்கம் யாரைக் குட்டினாலும் ஒரு குட்டுக்கு ஒரு ரூபா வீதமாகக் கொடுத்து விடுவார்கள் என்று பொறுமையாகச் சொன்னான். இவனுக்கு மிகுந்த ஆசை உண்டாகிவிட்டது. உடனே ஊருக்குள் ஓடினான். கொஞ்ச நேரம் கழித்துத் திரும்பி ஓடி வந்தான். அந்த முதல் ஆசாமியை மறுபடியும் பார்த்தான்.

'உங்கள் பேச்சைக் கேட்டு விட்டு ஊருக்குள் போய் ஒரு பெரிய ஆசாமியைப் பார்த்து அவன் தலையில் பத்துக்குட்டு குட்டினேன். ஆனால் அவன் உடனே என்னிடமிருந்ததை எடுத்து என் கையிலேயே கொடுத்துவிட்டான்' என்றான். என்ன பணமா? என்றான் அவன் இல்லை! பல்லு என்றான் இவன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தென்மராட்சியில் 5 பாடசாலைகள் மோசமாகப் பாதிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இடம் பெற்ற யுத்தத்தின் காரணமாக ஐந்து பாடசாலைகள் மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டு இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், மட்டுவில் மகாவித்தியாயம், மட்டுவில் வடக்கு கமலாசனி வித்தியாலயம் ஆகியவையே மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

இவற்றினைப் புனரமைப்புச் செய்வதற்கு பெருந்தொகையான நிதிதேவைப்படும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. (உ-77)

# ஆயுதங்களை ஒப்படைக்க தயார்

# தமிழ்க்கூட்டமைப்புடன் கூட்டுஇல்லை

## புளொட் பாக்கியநாதன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

படையினரிடம் ஆயுதங்களை ஒப்படைக்க தயாராக உள்ள அதேநேரம் படையினருடனோ அல்லது தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருடனோ இணையும் உத்தேசம் எதுவும் தமக்கு இல்லையென புளொட் அமைப்பின் மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் பாக்கியநாதன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் புளொட் அமைப்பின்இந்த நிலைப்பாட்டிற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும், இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்தில் புளொட் அமைப்பு தடையாக இருக்க மாட்டாதெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை புலிகளின் ஊடுருவலை தடுக்கும் வகையில் புளொட் அமைப்பினரால் மட்டக்களப்பு நகரில் மேற்கொள்ளப் பட்டு வந்த இரவு நேர ரோந்து நடவடிக்கை கடந்த சில தினங்களாக நிறுத்தப் பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது. (ந-4)

# அரச திணைக்களங்களில் தமிழை சீராக நடைமுறைப்படுத்த திட்டம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத் தாபனங்களில் தமிழ் மொழியை சீராக நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

இதற்காக அரசதிணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் தேவையான எண்ணிக்கையில் தமிழ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

அரசகரும மொழிகள் திணைக்களத்தில் நடைபெற்ற அரசகரும மொழியை சீராக நடைமுறைப்படுத்துவது தொடர்பான வேலைத்திட்டத்திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நீதி மறுசீரமைப்பு சட்ட தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் நூறுநாள் வேலைத்திட்டத்தின் கீழேயே இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. (செ)

## சூரிய மின்கலம் அன்பளிப்பு

(மந்திகை)

தும்பளை இலட்சுமணன் தோட்ட பிள்ளையார் ஆலயத்திற்கு இந்து கலாசார அமைச்சினால் சூரியமின்கலம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. (செ- 23)

## மலசலகூடங்கள் புனரமைப்பு

(மந்திகை)

பட்டினிக்கெதிரான நிறுவனம் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோரின் மலசலகூடங்களைப் புனரமைத்து வருகின்றது.

பிரதேச செயலர், கிராம அலுவலர் ஆகியோரின் உதவியுடனேயே இப்பணி நடைபெற்று வருகின்றது. (செ- 23)

## உடனடி இடமாற்றம்

(மந்திகை)

யாழ். மாவட்டத்தில்உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் 8சுத்திகரிப்புதொழிலாளர்களுக்குசுகாதாரசேவைகள் மாகாண பிரதி சுகாதாரப் பணிப்பாளரால் இம்மாதம் முதல் உடனடி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (உ- 23)

## மீன்பிடி வலைகள்

(மந்திகை)

செம்பியன்பற்று பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வசிக்கும் 10 மீனவக் குடும்பங்களுக்கு சுழற்சி முறைக் கடன் திட்டத்தின் கீழ் மீன்பிடி வலைகள், வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினால் வழங்கப்பட்டது. (உ- 23)

## மகளிர் தின விழா

(மந்திகை)

சர்வதேசமகளிர் தின நிகழ்வு, எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப 3. 00மணிக்கு கட்டைவேலி-நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் கொண்டாடப்படவுள்ளது.

சங்கத்தின் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தலைமையில்நடைபெறும் இந்நிகழ்வில் பிரபல பெண் எழுத்தாளர்கள் கருத்துரையாற்றவுள்ளனர். (உ- 23)

# க.பொ.த(உயர்) பரீட்சையை ஒத்திவைக்கக் கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்பிரல்மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப்பரீட்சையை ஒத்திவைக்குமாறு கொழும்பில் உள்ள பெற்றோர் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில்தற்போது நடைமுறையில் இருந்துவரும் மின்வெட்டுக் காரணமாகப் பரீட்சைக்கு மாணவர்கள் தம்மை தயார்செய்வதில் பலசிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் அத்துடன் ஏப்பிரல் மாதத்தில் புதுவருடப் பிறப்புக் கொண்டாட்டங்கள் நடைபெற விருப்பதால் அது மாணவர்கல்வியைப் பெரிதும் பாதிக்கும் என்றும் அவர்கள் தமது கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். (வ)

# வைத்தியசாலையில் துப்புரவுத் திட்டம்

'பிரஜைகளின் பங்களிப்பு மூலம் வைத்தியசாலையைத் துப்புரவு படுத்தும் திட்டம், பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் இம்மாதம்அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இம்மாதம் முதலாம் திகதி முதல் 31 ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்படவுள்ள இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சகல நோயாளர் விடுதிகள், மலசலகூடங்கள் மற்றும் சுற்றுப்புறச் சூழல் என்பன துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. (உ-23)

### தொடரும் திருட்டுக்களை தடுக்க

# இரவுநேர காவலர்களை உடன் நியமிக்கவும்

### ஊர்காவற்றுறை வர்த்தகர்கள் கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை நகர்ப் பகுதிகளில் தொடரும் திருட்டுக்களை தடுக்கக் கூடியவகையில் இரவு நேரக் காவலாளிகள் ,நியமிக்கப்பட வேண்டுமென அப் பகுதி வர்த்தகர்கள் வர்த்தக சங்கத்தினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அப் பகுதியில் ஊரடங்கு வேளையில் வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பொருட்கள் திருடப்பட்டதை அடுத்தே மேற்கண்ட கோரிக்கை விடப்பட்டது.

ஊர்காவற்றுறை நகருக்குச் சமீபமாக பொலிஸ் நிலையம் உட்பட முக்கிய அலுவலகங்கள் பல செயற்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-75)

## சிந்தனைக்கு விருந்து

### யார் இதைக் கேட்பார்?

காதலர் தினத்தில் கடலினுக் கடியில்
காதலர் மூச்சினை அடக்கிச்
சாதனை யாகப் புதுவகை மணத்தைச்
சாதிக்க முயன்றனர் ஆனால்
வேதனை கொண்டு மூச்சது திணற
விட்டனர் இன்னுயிர் இந்தச்
சோதனை ஏனோ? யார் இதைக் கேட்டார்?
சுத்தமுட் டாள் தனம் அன்றோ?

'பழையவன்'

# கலைஞர்களை மதித்து கௌரவிக்கின்ற பண்பு எமது சமூகத்தில் குறைவடைந்துள்ளது

## திருமறைக் கலாமன்ற பொதுச் செயலர் கவலை

(யாழ்ப்பாணம்)

கலையை ரசிக்கின்ற ஆர்வம் கலைஞர்களை மதிக்கும், கௌரவிக்கின்ற பண்பு எமது சமூகத்திலே குறைவடைந்து வருவதுகவலைக்குரியதாகும்.

இவ்வாறு தனது கவலையை வெளியிட்டார் திருமறைக் கலாமன்ற பொதுச் செயலாளர் ஜோன்சன் ராஜ்குமார்.

கல்வாரிஇராகங்கள் - 2 ''காவிய நாயகன்'' திருப்பாடுகளின் காட்சிப் பாடல்கள் ஒலிப்பதிவு நாடா வெளியீடு நேற்று முன் தினம் திருமறைக் கலா மன்ற கலைத்தூது மண்டபத்தில் குரு முதல்வர் பி.செல்வராஜா தலைமையில் இடம் பெற்றது.

இதில் வெளியீட்டுரை யாற்றிய ஜோன்சன் ராஜ்குமார் தொடர்ந்து உரையாற்றுகையில்;

ஒலிப்பதிவுத் துறை இன்று தென்னிந்தியாவில் அபரிமித வளர்ச்சி கண்டுள்ளது. ஒலிப்பதிவிலும் கணனியுகம் ஆரம்பித்து பல வருடங்களாகி விட்டன.

ஆனால்யுத்தமேகத்திற்குள் வாழ்ந்த நாம் இன்று அதன் ஆரம்பக் கட்டத்தில் தான் உள்ளோம்.

எமது கவின் கலைகள் பயிலகத்திற்கு இவ் வருடத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

வீணை -4 வயலின்- 10 என்ற ரீதியில் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

ஆனால், ஓர்கன் கற்பதற்கு நூற்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. மேலைத்தேய கலைகளைப் பயில்வதில் உள்ள ஆர்வம் எமது கலைகளைப் பயில்வதில் காணப்படவில்லை.

எமது சமூகத்தில் பலபெண்கள் கலைகளைப் பயின்றாலும் திருமண வாழ்வில் இணைந்தவுடன் தமது கலைவாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றனர். இந் நிலை மாற்றப்பட வேண்டும் என்றார். (உ-104)

## சர்வதேச நெருக்குதல்கள்

# புரிந்துணர்வு உடன்பாட்டை எதிர்ப்போரை மௌனிகளாக்கும்

## டிரோன் நம்பிக்கை

(கொழும்பு)

அரசு- புலிகள் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வுஉடன்படிக்கை எதிர்ப்பாளர்களை, சர்வதேச நெருக்குதல்கள் மௌனிகளாக்கும்.

பொது நலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு அவுஸ்திரேலியா சென்றுள்ள இலங்கையின்வெளிவிவகாரஅமைச்சர் டிரோன் பெர்னாண்டோ ரொய்டர் செய்திச் சேவைக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டார்.

போர் நிறுத்த உடன்படிக்கையை ஜனாதிபதி கண்டித்து தீவிரவாதப்போக்குடையவர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டு அவர்களைத் திருப்திப்படுத்தி வருகின்றார்.

அமெரிக்கா மீதானபயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னரான பயங்கரவாதத்திற்கு எதிரானநடவடிக்கைகள்சமாதானப் பேச்சுவார்த்தைக்கான புதிய சூழலை ஏற்படுத்தியுள்ளது இதற்கு உலகநாடுகள் தமது ஆதரவை வழங்கி வருகின்றன.

ஜனாதிபதி பல்வேறுபிரச்சினைகள் நெருக்கடிகளுக்கு ஆளாகி வருகின்றார். அவரது பிரச்சினைகளைப் போக்க முயற்சித்து வருகின்றோம் என்று மேலும் அப்பேட்டியில் தெரிவித்துள்ளார். (உ)

### பட்டினிக்கு எதிரான நிறுவனத்தால்

# போஷாக்கு நிலை பற்றிய புள்ளி விபரம் திரட்டல்

(மந்திகை)

சர்வதேச பட்டினிக்கெதிரான நிறுவனத்தால் யாழ். குடாநாட்டிலுள்ள ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் போஷாக்குத் தொடர்பான புள்ளி விபரங்கள் திரட்டப்படுகின்றது.

கிராம சேவையாளர்களும் சமுர்த்தி உத்தியோகத்தர்களும் கிராமங்கள் தோறும் சென்று இவ் விபரங்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (செ-23)

# ஜெயலலிதாவின் படத்திற்கு தார் பூசியவர் மீது வழக்கு

(சென்னை)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் படத்திற்குத் தார் பூசி அழித்த தி. மு. க. பிரமுகர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

ஜெயலலிதாவின் பிறந்த நாள், ஆண்டிப்பட்டித் தேர்தல்வெற்றி என்பவற்றை முன்னிட்டு சென்னை விழுப்புரம் பகுதிவீதிச் சுவர்களில் வரையப்பட்டிருந்த ஜெயலலிதாவின் படத்திற்கே மேற்படி நபர் தார் பூசி அழித்தார். (செ)

# தேர்தலில் வென்ற ஜெயா தலிபரம்பா கோவிலுக்கு தங்கக் குடம் வழங்கினார்

(சென்னை)

அ.இ.அ.தி.மு.க பொதுச் செயலரும் தமிழக முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா ஆண்டிப் பட்டித் தேர்தலில் அமோக வெற்றி பெற்றதனால் கேரளத்திலுள்ள தலிபரம்பா கோவிலுக்கு தங்கக் குடம் ஒன்றை நேர்த்திக் கடனாக வழங்கியுள்ளார்.

டான்சி வழக்கில் இருந்து, விடுபட்டு ஆண்டிப்பட்டித் தேர்தலில் வெற்றி பெற்றால் அக்கோவிலுக்கு தங்கக் குடம் ஒன்றை வழங்குவதாக நேர்த்திக் கடன் வைத்திருந்ததாகவும் தேர்தலில் வெற்றிபெற்றதனால் அந்த நேர்த்திக் கடனைச் செலுத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (செ)

# குஜராத்தில் வன்முறை பலியானோர் தொகை 540 ஆக உயர்வு

(புதுடில்லி)

குஜராத்தில் இடம் பெற்ற நேற்றுமதியம் வரையான 5 நாள் மத வன்முறைகளில் குறைந்தது 540 பேர் பலியாகியுள்ளனர்.

காயமடைந்த 200 ற்கும் மேற்பட்டவர்களில் 100 பேருக்கும் அதிகமானோர் உயிருக்காகப் போராடி வருகின்றனர்.

அகமதாபாத்சபர்மதி ரயில் எரிப்பின் எதிரொலியாக வெடித்த இந்த வன்முறைகளில் குழந்தைகள் உட்பட 650 பேருக்கு மேல் பலியாகி இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக பரவலாக நம்பப்படுகிறது.

இதேவேளை நேற்று முன் தினம் முதல் வன்முறைகள் ஓய்ந்து வருவதாக தெரிவித்த போதிலும் ஒருசில கிராமங்களில் இன்னமும் வன்முறைகள் இடம்பெற்று வருகிறது என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-7)

# கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றம் நடத்தும் நாடக அரங்கியற் கண்காட்சி இன்று ஆரம்பமாகி நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

கண்காட்சி தினமும் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெறும். (செ-104)

# ரணில் மன்னிப்பு கோரினார்

(கொழும்பு)

பகல் நேர மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டிருப்பதால் பொதுமக்கள் எதிர்நோக்கிவரும் இடைஞ்சல்களுக்காக பிரதமர் ரணில் மக்களிடம் மன்னிப்புக்கோரியுள்ளார்.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றினையும் அவர் விடுத்துள்ளார், (உ)

# நீரிறைக்கும் இயந்திரம் திருட்டு

(ஈச்சமோட்டை)

யாழ். மாநகரசபையின் சுகாதாரப் பகுதியினரின் தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த நீரிறைக்கும் இயந்திரம் கடந்த வியாழன் இரவு மாநகரசபைக் களஞ்சியத்திலிருந்து திருடப்பட்டுள்ளது. (உ-5,59)

# கைதிகளை விடுவிக்க முயற்சி

(கொழும்பு)

பயங்கரவாதம் மற்றும் குற்றச்செயல்களின்பேரில் நாட்டின் பல்வேறு சிறைகளிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள மலையக அரசியல் கைதிகள் மற்றும் தமிழ் இளைஞர்களை விடுவிக்கும் முயற்சிகளில் சமூக மேம்பாட்டுத் துறை அமைச்சர் பெ. சந்திரசேகரன் ஈடுபட்டுள்ளார். (உ-8)

# கடன் வசதி

(யாழ்ப்பாணம்)

மீசாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் மீளவும் தனது சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

மேற்படி சங்கத்தில் கடன் வசதி பெற்றோர் அதனைச் செலுத்தி புதிய கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-124)

### மீளக் குடியமர்ந்த

# மக்கள் கோரிக்கை

(கல்வயல்)

வாதரத்தை, வீரவாணி, ஆயத்தடி, முடவன் வயல், மட்டுவில், முசுறி, வேம்பிராய், மீசாலை, கொடிகாமம், கல்வயல், மிருசுவில், கச்சாய், அல்லாரை, சங்கத்தானை, சாவகச்சேரி, சரசாலை, மந்துவில், வரணி ஆகியபகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் பன்றித் தலைச்சி அம்மன் ஆலய உற்சவகாலங்களில் இடையூறின்றி ஆலயம் சென்றுவர ஏற்ற வழிவகை செய்யுமாறு இந்துகலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் மற்றும்நாடாளுமன்றஉறுப்பினர் என். ரவிராஜ் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-111)

## விளையாட்டுச் செய்திகள்

# இந்திய அணியிடம் சிம்பாவே தோற்றது

(புதுடில்லி)

இந்திய-சிம்பாவே அணிகளுக்கிடையேடில்லியில் இடம் பெற்ற இறுதி டெஸ்ட் போட்டியில்இந்தியஅணி 4 விக்கெட் வித்தியாசத்தில் சிம்பாவே அணியை தோற்கடித்துள்ளது.

முதலில்துடுப் பெடுத்தாடிய சிம்பாவே அணி, 329 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸ்சில் 146 ஓட்டங்களையும்பெற்றது.

பதிலுக்குத்துடுப் பெடுத்தாடிய இந்தியஅணிமுதல் இனிங்ஸ்சில் 354 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸ்சில் 6 விக்கெட் இழப்பிற்கு 124 ஓட்டங்களையும் பெற்றுவெற்றியீட்டியது.

போட்டியின் நாயகனாக ஹர்பஜன் சிங்கும் தொடர் நாயகனாக அணில் கும்ளேயும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-10)

## தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் 50 ஆவது ஆண்டு நிறைவுபொன் விழாவை முன்னிட்டு நடாத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று பி.ப 4.30 மணிக்கு சிவசக்தி வி. க எதிர் சிந்து வி. க ஆகியன மோதவுள்ளன. (உ-3)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஊரெழு கணேச வித்தியாசாலை, ஊரெழு சி.சி.த.க. பாடசாலை ஆகியவற்றின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி.ப.1.30 மணிக்கு அதிபர் இ.குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு முதன்மை விருந்தினர்களாக யாழ்.வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன், கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (செ-9)

## சிரிக்கெட் போட்டி

(கோப்பாய்)

கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கிடையே மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி நாளை ஆரம்பமாகவுள்ளது.

இப் போட்டியில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி எதிர் அச்சுவேலி மத்திய கல்லூரி, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி எதிர் இடைக்காடு மகாவித்தி, உரும்பிராய் இந்துக்கல்லூரி எதிர் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தி ஆகியன கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3,79)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சங்கானை கல்வி கோட்ட விளையாட்டுப் போட்டி இன்று பி.ப 2.00 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சங்கானைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்லையா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு, யாழ். பல்கலைக்கழக உடற்கல்விப் பிரிவு இணைப்பாளர் ஆர். கணேசநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். (செ)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கோப்பாய்)

யா/ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி அருகிலுள்ள மைதானத்தில் அதிபர் அ.அருந்தவநேசன் தலைமையில் நாளைபி.ப1.30மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரனும்சிறப்பு விருந்தினராக கோப்பாய்க் கோட்ட உதவி கல்விப்பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரமும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-79)

வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார் மேல் செல்லும் இடத்து.

- குறள்

## வலம்புரி

### முற்பகல் செய்யின்...

முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் மகன்மார் இருவர் தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அனுருத்தவும் சிறையில் இருக்க வேண்டியவரெனினும் அவரது சுகவீனம்? காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கண்டி மடவளைப் பகுதியில் இடம் பெற்ற படுகொலைச் சம்பவம் இராஜ மரியாதையுடன் நடமாடிய அனுருத்த ஐயாவை, அவரது புதல்வர்களை சிறைக் கம்பி எண்ணவைத்துவிட்டது.

தமிழ் இளைஞர்களின் கைது, காணாமல் போனமை விடயத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கு இருக்கக்கூடிய தொடர்பு தமிழ் - சிங்கள துவேஷத்தால் நீதி விசாரணையின்றி மழுங்கிப் போகலாம். ஆனால் ஆளுங் கட்சியில் இருந்த பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சி கவிழும் காலத்தில் தேர்தலின் போது பத்து முஸ்லிம் இளைஞர்களின் படுகொலையுடன் அனுருத்த ரத்வத்தையும் அவரது பிள்ளைகளும் தொடர்பு கொண்டிருந்தனர் என்ற சந்தேகம் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற மூத்தோர் வாக்கை மெய்ப்பித்துள்ளது.

1995 ம் ஆண்டு யாழ்ப்பாணத்தைப் படையினர் கைப்பற்றியபோது பலாலி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் தங்கியிருந்து கட்டளை பிறப்பித்தவர் அனுருத்த. அக்கட்டளை விடுதலைப்புலிகளை ஒழிப்பதற்காக அல்ல புலிகளை சிங்களப் படையால் ஒழிக்கமுடியாதென்றஉண்மை அனுருத்தவுக்குத் தெரியாததுமல்ல.

ஆனால் எமது ஆட்சியில் யாழ்ப்பாணத்தைப் புலிகளிடமிருந்து மீட்டோம் என்ற வரட்டுக் கௌரவத்திற்காக அனுருத்த ரத்வத்த மேற்கொண்ட படைநடவடிக்கை எத்தனையோ அழிவுகளை, இடம்பெயர்வுகளை, வரலாற்றில் கறைபடிந்த சோகங்களை ஏற்படுத்திவிட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற வேண்டுமென்ற வக்கிரமானபோக்கே பொது ஜன ஐக்கிய முன்னணியின் வீழ்ச்சிக்கும், அனுருத்தவின் இந்நிலைக்கும் காரணமாகும்.

# வாத, பித்த, கபங்களினதும், ஏழு தாதுக்களினதும்

# இயற்கை நிலை மாறுபாடே நோயெனப்படும்

## மருத்துவ விளக்கம்

**வாத, பித்த, கபங்களின் உருவான நிலைமைகள்**

மனித உடல் ஊட்டப் பொருட்கள், அணுக்கள், மலங்கள் ஆகியவற்றால் ஆனது. ஊட்டப் பொருள், வாத, பித்த, கபமென மூன்று வகையாகும். தாதுக்கள வெண்குருதி, இரத்தம், சதை, கொழுப்பு, எழும்பு, எலும் புட்கரு, உயிரணு என ஏழு வகையாகும். மலங்கள், சிறுநீர், வியர்வை, மலம் என மூன்று பிரிவுகளாகும். உடல் நலத்தின் பாதுகாப்புக்கு இனங்கள் அனைத்தினுடைய இயற்கையான நிலைகள் காப்பாற்றப்படல் அவசியம். எப்போது இவற்றின் ஒழுங்கு நிலை குலைகிறதோ அப்போதுதான் நோய் உண்டாகும். நோயில் அளவுக்கு மிஞ்சிய நிலைகளையே மக்கள வாத, பித்த, கபமென எண்ணுகின்றனர். முதலில் நோயின் காரணங்களை நீக்கி குற்றங்களைந்து தாதுக்களை அவற்றின் சரியான நிலைக்குக் கொண்டுவருவது தான் சிகிச்சையின் முக்கிய தத்துவமாகும். இவற்றில் ஏதாவதொன்று கூடினால் அதைக் குறைக்கவும், குறைந்தால் உயர்த்தவும் வேண்டியதே சிகிச்சைக் கடன். இதைத் தேவைக்கேற்றவாறு மருந்து, உணவு, வாழ்க்கைப் பழக்கம் இவைகளை ஒழுங்குபடுத்தலால் செய்யலாம்.

**வாத, பித்த, கபதோஷங்கள்**

1, வாதம் - வறட்சியாகவும், இலேசாயும் சீதனத் தன்மையுடையதாயும், முறப்பாயும், சுறுசுறுப்பாயும் இருப்பதோடு சிவந்த செவ்வானநிறத்தையுமுடையது.

2. பித்தம்- பிசுபிசுப்பாயும், எண்ணெய் பசையுடன் உஷ்ணம் செய்வதாயும், சுறுசுறுப்பாயும், கசப்பாயும், பசுமை அல்லது மஞ்சள் நிறமாகவுமிருக்கும்.

3 கபம் - குழுகுழுப்பாயும், அசைவற்றதாயும், வழுவழுப்பாயும், பாரமாயும், குளிர்ச்சிபாயும், மிருதுவாயும, இனிப்யாயும் வெண்மையாயுமிருக்கும்.

சில சமயங்களில் இத்தோஷங்கள் அளவு குறைந்தால் அக்குறிகள் தோன்றும். அப்போது வாதபித்தம், வாதகபம், பித்தகபம் ஏற்பட்டதென்றோ அல்லது மூன்று தோஷ களும் பாதித்திருக்கிறதென்றோகூறலாம். நிலைகுலைவையறிந்து ஏற்ற சிகிச்சை செய்யவேண்டியது மருத்துவரின் கடமையாகும்.

நகச்சிதைவு, தோல் வறட்சி, அங்கம் மரத்துப் போதல், உடலின் தொழில் மந்தம், விறைப்பு, தசைப்பிடிப்பு, தசை இறுகல், மலச்சிக்கல், எச்சங்கள் வறட்சி, நாச்சொறி, செவிடு, மூர்ச்சை, நித்திரையின்மை, நடுக்கம், கொட்டாவி, பிதற்றல், மூளை நரம்புகளின் நிலை குலைவால் ஏற்படும் கோளாறுகள் ஆகியவை நிலை குலைந்த வாதத்தின் அறிகுறிகளாகும். வாயில் துவர்ப்புச் சுவையும், தேகத்தில் தாம்பர நிறமும் இருக்கக் கூடும். இவ்வாதநோய்கள் 80 க்கு மேலும் இருக்கலாம்.

தணல் வீசுவது போன்ற வெப்பம், புளிப்புச்சுவை, உடலுள் எரிச்சல், அதிக வியர்வை கொப்புளங்கள், மஞ்சள் நிறக் காமாளை, சுவாச நாற்றம், ஆசன எரிவு, மயக்கம்பார்வை மந்தம், சிறுநீர், கண்கள், நகம் மஞ்சள் நிறமாதல் முதலியன நிலை குலைந்த பித்தத்தின் அறிகுறிகளாகும். இப்பித்த நோய்கள் 40க்கு மேலும இருக்கலாம்.

பசி, மந்தம், அயர்வு, மீறிய தூக்கம், உடல் பளுவாதல், சோம்பல், வாய்நீர்சுரப்பு மிகுதி, மலப்பொருள் கூடுதல், குரல் விகாரம், பலவீனம், இரத்தக் குழல்கள் நிரம்பியது போல் இருத்தல், கழுத்தில் நெறி கட்டுதல், நமைச்சல், தோல்வெளுப்பு, சிறுநீர் கண், நகம்வெளுத்தல் முதலியன நிலைகுலைந்த கபத்தின் அறிகுறிகளாகும். இக்கப நோய்கள் 20க்குமேலும்இருக்கலாம்.

**நோயும் சிகிச்சையும்**

மனித உடலில் வாத, பித்த கபமிகுதி குறைவால் ஏற்படுவதே நோய் எனப்படும். சிகிச்சையின் நோக்கம் இவற்றின் நிலையைச் சரிப்படுத்துவதேயாகும். நோய்க்காரணங்களை நீக்குவதாலும், வேலை, இளைப்பாறுதல், தூக்கம்முதலிய பழக்கவழக்கங்களை ஒழுங்குபடுத்துவதாலும் உணவு அல்லதுமருந்தின்சிகிச்சையாலும் இவை நிறைவேறுகின்றன. ஆசன மூலம் குடல் சுத்தி செய்தல், வாயுவைக் கண்டிப்பதற்கும், பேதி கொடுத்தல்பித்தசாந்திக்கும், வாந்தியுண்டு பண்ணுதல் கபத்தை நீக்கவும் சிறப்பானவை. வாயுவைச்சிற்றாமணக்கு நெய்யாலும், பித்தத்தை நெய், சர்க்கரையாலும், கபத்தைத் தேனிலும் கரைக்கச் சிறந்தவையாகும் கபநோய்களுக்கு உஷ்ண வீரிய சிகிச்சைகளும், பித்த நோய்களுக்கு சீதன சிகிச்சைகளும் வாதநோய்களுக்குசமன சிகிச்சைகளும் சிறந்தவைகளாகும். இனிப்பு, புளிப்பு, உவர்ப்புச் சுவையுள்ள பொருள்களால் வாதமும், இனிப்பு, கைப்பு, துவர்ப்புச் சுவையுள்ள பொருள்களால் பித்தமும், துவர்ப்பு, கார்ப்பு கைப்புச்சுவையுள்ள பொருள்களால் கபமும் தணிக்கை பெறும். தோஷநிலைகுலைவு, மருந்துகளின் குணங்கள், உணவுப் பொருள்களின் தன்மைகள் முதலியவற்றை நன்கு உணர்ந்து தக்கவாறு சிகிச்சை செய்யவேண்டும்,

மருந்துச் சிகிச்சை, இரண சிகிச்சை மூன்றுவகைப்படும். அவை உள் சுத்தி, புறச்சுத்தி, இரணசிகிச்சை என்பனவாகும். மருந்துச் சிகிச்சைகள் மேலும் அறுவகைப்படும். வளர்த்தல் பெருக்குதல், குறைத்தல், வழுவழுப்பாக்கல், வறட்சியாக்கல், வியர்வை உண்டாக்கல், சுருக்குதல் முதலியனவாகும்.

1. வாந்தியுண்டு பண்ணுதல்
2. பேதியுண்டாக்கல்
3. ஆசன மூலம் குடல் சுத்தி செய்தல்.
4. நாசியில் நசியமிடுதல்.
5. இரத்தத்தை வெளியாக்குதல் முதலியபஞ்சகர்மங்களை சரியான முறையில் அநுட்டித்தல் முக்கியமாகும்.

எல்லாமருந்து சிகிச்சைகளும் சூடு செய்வித்தல், குளிர்வித்தல் ஆகிய இருமுறைகளில் அடங்கும். திரிதோஷங்களின் அளவு மிகுதி, குறைவுக்கு ஏற்றவாறு காரணங்களைஅதிகப்படி சேர்ப்பதாலும், குறைப்பதாலும்குணப்படுத்த வேண்டும். ஒத்த தன்மை சேர்ந்தால் மிகுதியாகும். வேறாய தன்மைகள் சேர்ந்தால்குறையும். இதுவேபொதுவான சிகிச்சை விதியாகும்.

**ஆயுள் வேதத்தின்குறிக்கோள்**

1. வலி நீங்குதல் 2. இயற்கையான குரலொலி 3. தோலின் பழைய நிறம் 4 தசையணுக்கள் வளர்ச்சி 5. வலிமை மிகுதி 6. உணவில் விருப்பம் 7. நல்ல சுவை 8. உணவு நன்கு சீரணித்தல் 9. வழக்கமான தூக்கம் 10. துயில் குலைக்கும் கனவுகளின்மை 11. குதூகலமாக துயில் நீத்தெழுதல் 12. சிறுநீர், மலம், விந்து முறைப்படி கழிபடல் 13. மூளை, அறிவு ஐம்பொறிகள் சரிவரவேலை செய்தல் முதலியவற்றால் நோயாளி குணமடைந்தானெனக் கண்டுகொள்ளலாம். சுருங்கக் கூறின் நோயாளி மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருத்தல் வேண்டும். எவரும் திருப்தியடையாமல் உண்மையில் மகிழ்ச்சி அடைய இயலாது. திருப்தியும், மகிழ்ச்சியும், நீண்ட ஆயுளும் பெற்ற வாழ்க்கையே ஆயுள் வேதத்தின் குறிக்கோளாகும்.

நன்றி
அறத்தமிழ்ஞானம்
மருத்துவக்குறிப்புகள்

# ஆசிரியர்கள் மத்தியில் குறைகேள் சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர்ஆசிரியர் சங்கம் யாழ். கல்வி வலயத்துடன் இணைந்து குறைகேள் சேவையை நடத்தவுள்ளது.

நாளை புதன்கிழமை யாழ். கல்வி வலயத்தில் நடைபெறவுள்ள இக்குறைகேள் சேவையில் நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய் ஆகிய கல்விக் கோட்டங்களில் கடமைபுரியும் ஆசிரியர்கள் தாங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளலாம் என சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

(உ-7)

## தினசரி தியானம்

### மனதை ஒழுங்கு படுத்துதல்

வஞ்சனையும் பொய்யும் உள்ளே
வைத்து அழுக்காறாயுளறும்
நெஞ்சனுக்கும் உண்டோ
நெறிதான் பராபரமே.

- தாயுமானவர்

உலகை யெல்லாம் ஒழுங்குபடுத்த முயலும் நான், என்னையே ஒழுங்குபடுத்த யாண்டும் ஊக்கம் கொள்வேனாக.

தன்பாலுள்ள குற்றங்களையும் குறைகளையும் மறைத்து வைக்கும் பான்மை மனிதனிடத்துண்டு. அக்கேடுகளை யாராவது வெளிப்படுத்தினால் அதை அவன் சகிப்பதில்லை. அத்தகையவனால் ஆசைகளை வெல்ல முடியாது. மெய்வழிச் செல்லும் சீர்மையும் அவனிடத்தில்லை. தனது சிறுமைகளைத் தயங்காது பிறர், ஆராய்ச்சிக்கு உட்படுத்துபவனே அவைகளைக் களைய வல்லவனாகிறான்.

-ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (21)

### தவக்காலம் - மூன்றாம் வாரம் (ஊதா)

### திபா 25:4-9: 'ஆண்டவரே' உமது இரக்கத்தையும், உமது பேரன்பையும் நினைத்தருளும்'

'மன்னிப்பு மனிதனின் முக்கிய தேவையும், மிக உயர்ந்த சாதனையுமாகும்' என்கிறார் அறிஞர் புஸ்லால். நம் குற்றங்களுக்காக அன்றாடம் இறைவனது மன்னிப்பை வேண்டும் நாம் பிறரது குற்றங்களை மன்னிக்க மிகுந்த தயக்கம் காட்டுவது சிறப்பல்ல! இறைவனின் மாபெரும் மன்னிப்பை இறைவாக்கினர் அறிக்கையிட்டனர் (தானி 9:9) இயேசு தெய்வீகப் பண்பாகிய மன்னிப்பை நாள் தோறும் நடை முறைப் படுத்தினார். பிறரை மன்னிப்பதில் தளராது வாழ்வோம். இறைவனின் இரக்கத்தின்ஒளி நம்மில்அணையாது காப்போம்.

- காவலன்

போஷாக்கிற்கு
ஜீவாகாரம்
வளரும்
பிள்ளைகளுக்கும்
பாலூட்டும்
தாய்மார்களுக்கும்
ஏற்ற சத்துணவு
உணவிற்கு தயார் நிலையில்
உள்ள ஒரு முழு உணவு
அன்னா தொழிற்சாலை
இணுவில்
T.P.: 3565

# ஆப்கானில் பூமியதிர்ச்சி
# 150 பேர் பலி; பலர் காயம்!

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நேற்று இடம் பெற்ற பூமியதிர்ச்சியால் 150 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். நூற்றுக் கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர்.

பூமியதிர்ச்சியின் போது இரண்டு மலைகளுக்கு இடைப்பட்ட பகுதியில் ஏற்பட்ட மண் சரிவினாலேயே அனேகமானோர் உயிரிழந்ததாக தெரியவருகின்றது.

7.2 ரிச்டர் அளவில் பதிவான இந்த பூமியதிர்ச்சி தஜகிஸ்தான் முதல் இந்தியா வரை உணரப்பட்டது.

இதேவேளை மண் சரிவினுள் அகப்பட்டு உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பவர்களை மீட்கும் பணி முழு வீச்சில் இடம் பெற்று வருவதாக உலக உணவுத் திட்டத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த மண் சரிவினால் உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் இடம் பெற்ற யுத்தத்தின் வடுக்கள் ஆற முன்னர் இயற்கையும் அவர்களுக்கு தண்டனை வழங்குவது போல் நிலைமை அமைந்துள்ளது. (ந-5)

## நீதிமன்றில் தீ விபத்து

(அவிசாவளை)

அவிசாவளை நீதிமன்றத்தில் காப்பக அறையில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 40 ஆயிரம் வழக்கு கோவைகள் எரிந்து சாம்பராகியுள்ளது.

நேற்றுக் காலை 8.00 மணியளவில் இடம்பெற்ற இத் தீ விபத்து திட்டமிட்ட சதி என நீதி மன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(வ)

சிக்கனமான சலவைக்கும்
தூய வெண்மைக்கும்
மில்க்வைற்
பாவியுங்கள்
மில்க்வைற் சோப்
இண்டஸ்ரியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541

**புலிகளின்...**

பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்திற்கான தமது அலுவலகத்தை திருநெல்வேலியில் திறக்கவுள்ளதாகவும் இதற்கான ஏற்பாடு கள் இடம் பெற்று வருவதாகவும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மையில் விடுதலைப் புலிகளின் அணியினர் குடாக்கடல் ஊடாக குருநகர் மற்றும் பாசையூர் பகுதிகளிற்கு விஜயம் செய்து படை அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோரைச் சந்தித்து உரையாடியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

**கொழும்பில்...**

முன்னாள் இராணுவ அதிகாரி ரொண்ட் பியூறு ஹோவிட் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று கோரி கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்னால் இன்று ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.


கோட்டை புகையிரத நிலைய முன்றலில் இடம் பெறவுள்ள இவ் ஆர்ப்பாட்டத்தை பிக்குமார் முன்னணி ஏற்பாடு செய்துள்ளது.(வ)

**இரு புதல்வர்களுடன்...**

பட்டதை அடுத்து பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த முன்னாள் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த ஜனாதிபதியின் வேண்டுகோளின் பேரில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவின் ஏற்பாட்டில் பாதுகாப்பாக ஹெலி மூலம் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப் பட்டார்.

சந்தேக நபர்கள் அனைவரையும் அடையாள அணிவகுப் பிற்கு உட்படுத்திய பின் இம் மாதம் 14ந் திகதி வரை விளக் மறியலில் வைக்குமாறு நீதிவான் செல்வி இனோகாரண சில்வா உத்தர விட்டார். (வ)



நல்லை ஆதீனப் பராமரிப்பு நிதியப் பொருளாரும், சிறந்த சமூக சேவையாளருமான திரு. க. சோமசேகரம் (மகாராணி) அவர்கள் இந்து கலாசார அமைச்சினால் பல்துறைப் பணிகட்காக "கலைஞானகேசரி" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். "மகாவித்துவான்" ந. வீரமணி ஐயர் விருது வழங்குவதை படத்தில் காணலாம்.



அண்மையில் உரும்பிராயில் இடம்பெற்ற சித்த மருத்துவமனை திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிஸ்ணசாமி மங்கள விளக்கேற்றுவதையும் வலி கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம், செயலாளர் குகதாசன் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.

**பிளவுபட்ட...**

உடன்படிக்கையில் அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது.

*கட்டாய ஆட்சேர்ப்பு தடுக்கப் பட்டுள்ளது*

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் கட்டாய ஆட்சேர்ப்பு, துன்புறுத்தல், சிறுவர்களை போரில் ஈடுபடுத்தல் போன்றவற்றில் விடுதலைப் புலிகள் ஈடுபடுவது தடுக்கப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்தங்களின் போது முஸ்லிம்கள் கஷ்டங்களை அனுபவித்திருப்பதால் உடன்படிக்கையின் மூலம் அவர்களுக்கும் நிவாரணம் தேடக் கூடிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வடக்கிலும், கிழக்கிலும் முஸ்லிம்கள் தத்தம் வாழ்விடங்களில் பாதுகாப்புடன் வாழ்வதை உறுதிப்படுத்தும் கடப்பாட்டை அரசு கொண்டுள்ளது. அவர்களின் பகுதிகளில் பொலிஸாரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் பாரிய பொறுப்பை அரசாங்கம் கொண்டுள்ளது. எனினும் வடக்கிலும் கிழக்கிலும் ஒரு பகுதியில் இதனை நடைமுறைப்படுத்த முடியாதிருப்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொண்டுவர முடியாத பகுதிகளிலேயே புலிகள் செயற்பட்டு வருகின்றன.

*வெளிநாடு உதவி செய்வது இது முதற் தடவை அல்ல*

2001 ஆம் ஆண்டு அரசாங்கம் குடிசன கணக்கெடுப்பை மேற்கொண்ட போது முதற் தடவையாக இப் பகுதிகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லை என்பதை அரசு ஏற்றுக் கொண்டது.

நோர்வே அரசு சமாதான முயற்சியில் மத்தியஸ்தராக மட்டுமே கடமையாற்றுகின்றது. வெளிநாடு ஒன்று இலங்கைக்கு உதவி செய்வது. இது முதற் தடவை அல்ல. 1987ம் ஆண்டு இந்தியா உதவி செய்ய முன் வந்த போதும் இந்தியப் படையினர் திருப்பி அழைக்கப்பட்டனர். என்றார் அப்போது இந்தியா பற்றி பேசிய அதே நபர்கள் நோர்வே பற்றியும் இப்போது பேசுகிறார்கள். இந்நிலையில் இவர்கள் முன்னர் செய்த தவறுகளை இப்போதும் செய்யக்கூடாது என்றும் பிரதமர் ரணில் தனது பேச்சின் போது வற்புறுத்திக் கூறினார். (வ)

தினசரி செய்திகளுடன்
வலம்புரியின் வாரமலர் சங்கு நாதம்
நாளை வெளிவருகிறது!

உங்கள் சங்குநாதத்தில் ஒலிப்பவை...

- அரசியல் அலசல்
- வியாசரின் கேள்வி பதில்
- சிறுகதை
- இலக்கிய நயம்
- கவிதைக் கலசம்
- சிரிக்கும் ஜோக்குகள்
- தித்திக்கும் சினிமா
- தொடர்கதை
- சிறப்புக் கட்டுரைகள்

இன்னும் பல பல
சுவையான துணுக்குகள், அம்சங்கள்.
உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் நடாத்தும்
மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் 2002ம் ஆண்டிற்கான முதலாவது கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியினை ஆண்/ பெண் இருபாலார்க்கும் நடாத்தவுள்ளது. எனவே இச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் 2002.03.12 ம் திகதிக்கு முன்பாக கீழ்க்காணும் செயலாளரின் முகவரிக்கு தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அன்போடு வேண்டப்படுகின்றனர். அத்தோடு சங்கத்தில் புதிதாக இணைய விரும்பும் கழகங்கள் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

– செயலாளர் –

கி. மனோகரன்
66/10, 5ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(4781)

CHURCH OF CEYLON - CENTRE FOR LEARNING AND CULTURE

இலங்கைத் திருச்சபையின் மாணவர் கல்வி முன்னேற்ற திட்டத்தின் பாடநெறிகள்

யாழ். மாணவர்களின் கல்வி வளர்ச்சியை கருத்தில் கொண்டு கீழ் வரும் பாடநெறிகள் இலவசமாக கற்பிக்கப்படவுள்ளன.

1. மாணவர்களுக்கான விசேட ஆங்கிலம். Spoken English
   a) 4ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை
   b) 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை
2. நடனம்
3. வயலின்
4. வீணை
5. சங்கீதம்
6. மிருதங்கம்
7. Piano
8. மனையியலும் தையலும்

ஒவ்வொரு நெறிக்கும் 30 மாணவர் மட்டும் தெரிவு செய்யப்படுவார்கள்.

கற்பிக்கப்படும் இடம்: தில்லையம்பலம் நினைவு கட்டடம்,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,
பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி.

விண்ணப்பப்படிவம் பெற்றுக் கொள்ளும் இடம்:
பரி.யோவான் ஆலய காரியாலயம்,
452, பிரதான வீதி, சுண்டிக்குளி.

விண்ணப்ப முடிவு திகதி: 09.03.2002

திரு. D.R. அருமைநாயகம்
Director

வண. S.P. நேசகுமார்
Archdeacon of Jaffna

[4759]

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை மகாதேவா

*(மெக்கானிக்)*

புளியங்கூட்லைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மகாதேவா நேற்று (04.03.2002) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னரர் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், அமரர்களான திரு. திருமதி. வேலுப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவகடாட்சம், இராசரெத்தினம் (கொழும்பு), இராசலட்சுமி, நவரட்ணம், அமிர்தாதேவி, புவனேஸ்வரி (கொழும்பு), சிவசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் யசிகலா, யசோதா, விஜிதா, அனுசா, அறிவழகன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (04.03.2002) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அவைரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
ஞா. செந்தமிழ்செல்வன்
*(மருமகன்)*

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

[C/3652]